# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 60
பக்கங்கள்: 16+132

சுடர் 33 கதிர் 48 மார்கழி 29ஆம் நாள் சனிக்கிழமை 13 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2048


## களைகட்டும் பொங்கல்...



தைத்திருநாளை முன்னிட்டு, பொங்கல் பானைக் கொள்வனவில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள யாழ்.நகர மக்கள்

## பதவி ஆசை இல்லை

### - மைத்திரி

கொழும்பு, ஜன. 13

அரச தலைவர் பதவிக்கு ஆசைப் பட்டு நான் போட்டியிடவில்லை. எனது நோக்கமும் அது கிடையாது. இந்தப் பதவியை விட்டுக் கொடுக்காது பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. நாம் முன்னெடுக்கும் திட்டங்களை எனது பதவிக் காலத்தினுள் செய்து முடிக்க முடியுமா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்காகவே நீதிமன்றை நாடினேன்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான மாபெரும் மக்கள் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை திஸ்ஸமகாராம என்.ரி.தயானந்த விளையாட்டு மைதானத்தில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பாரபட்சமின்றி செயற்படுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றேன். நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்ப

>> 11

## விதிமீறல் விசாரணையில் பொலிஸ் பக்கச்சார்பு!

### மாவட்ட செயலகத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 13

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் தேர்தல் அறிக்கை வெளியிட்ட விவகாரத்தில் பொலிஸார் விடயத்தை திசை திருப்பும் வகையில் செயற்படுகின்றனர் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணையாளருக்கும் முறையிடப்பட் டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் போட்டியி

>> 11

# புலிகளின் கானத்தோடு சு.க. பரப்புரை

யாழ்ப்பாணம், ஜனவரி13

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பரப்புரை நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிப் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டன.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நடைபெற்றது. அதன் ஆரம்பத்தில் இந்தப் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டன.

புலிகளின் கானத்துடன் பரப்புரை நடத்தப்பட்டமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்துக்கள் வெளியிட்டுவருகின்றனர். இந்தச் சம்பவம் தெற்கு அரசியலிலும் பேசு பொருளாக மாறியுள்ளது. தெற்கு அரசியல்வாதிகள் இது தொடர்பான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படத்துடன் சமூக வலைத் தளங்களில் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் கொழும்பு நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ற-ரி4,37)


132 பக்கங்கள்!!
விளம்பரமே இல்லை!
உதயன், பொங்கல் மலர்
விலை 60/=
இன்றைய உதயனுடன் கேட்டு வாங்குங்கள்


## சுதந்திரக் கட்சியும் ஈழத்துக்கு ஆதரவா?

### நாமல் கேள்வி

கொழும்பு, ஜன. 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழீழத்தை - தனிநாட்டை அங்கீகரித்து விட்டதா என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பியுள் ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுகமும், தேர்தல் அறிக்கை வெளியீடும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்

>> 14

## புரட்சிப் பாடல் ஒலித்தமை தேர்தல் விதிமுறை மீறலே

### கபே அமைப்பு கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜன.13

தேர்தல் பரப்புரைகளில் தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் கொடிகள், சின்னங்கள் என்பவற்றை உபயோகிப்பது சட்டவிரோதமானது. அது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல் என்று கபே அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி

>> 14

### மன்னார் முசலியில்

## 3 கோடி ரூபா மதிப்புள்ள கேரளக் கஞ்சா சிக்கியது



மன்னார், ஜன.13

மன்னார், முசலியில் 356 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவின்

>> 14

## தேர்தல் வன்முறைகள் வடக்கில் குறைவு

### கபே நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

வடக்கு மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் குறைவாகப் பதிவாகியுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளன என்று தெரிவித்தார் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத் திருத்தங்கள் மற்றும் பெண் பிரதிநிதித்

>> 11

## டிப்பர் விபத்தில் சாரதி உயிரிழப்பு

### கிளிநொச்சியில் துயரம்



கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி, இரணைமடுச் சந்தியில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் முன்பாக இந்த விபத்து நடந்துள்ளது. மாங்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இரு டிப்பர்கள் மோதி விபத்துக்குள்ளாகின.

>> 14

## மாணவர்களின் மோதலுக்கு அரசியல் காரணமல்ல

### ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான மோதலின் பின்னணியில் எந்த அரசியல் காரணமும் இல்லை என்று அனைத்துப் பீட மாணவர் ஒன்றிய தலைவர் கிருஷ்ணமேனன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்

>> 11



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பொங்கல் பொருள்கள் வியாபாரம் குடாநாட்டில் சூடுபிடித்துள்ளது. யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் பொங்கல்பொருள்களான பானை, கரும்பு, பழங்கள், அகப்பை போன்றவற்றை மக்கள் ஆர்வத்துடன் நேற்றுக் கொள்வனவு செய்து சென்றனர்.

# சர்வாதிகாரியாக ரணில்: விசாரணைக்கு தயார்

## மகிந்த கர்ச்சிப்பு

கொழும்பு, ஜன. 13

2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவ ரையான காலப் பகுதியில் எமது ஆட்சியின்போது விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகளில் மோசடிகள் இடம்பெற்றிருப்பதை அரச தலைவர் ஆணைக்குழு உறுதிப்படுத்தியிருந்தால் அது தொடர்பில் விசாரணைகள் நடக்கட்டும். விசாரணைகளுக்கு முகம்கொடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம். எமது அதிகாரிகள் மீது நம்பிக்கையும் இருக்கின்றது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பி.பி.சி. சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, அரச தலைவர் ஆணைக்குழு எங்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்க வில்லை. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மீதே குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. அவர்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை அவரே தெளிவுபடுத்தவேண்டும். நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி, பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுபிள்ளை போன்று சர்வாதிகாரத்துடன், நாடாளுமன்றில் இந்த விவகாரம் குறித்து அவர் உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

ஆணைக்குழுமூலம்ஏதும்பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தால் அதற்கு நான் உரிய பதிலை அளிப்பேன். 2008ஆம் ஆண்டுமுதல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெளிவாகக் கூறினால் அது தொடர்பில் விசாரணைகள் செய்து உரிய கணக்காய்வுகளை மேற்கொள்ளவேண்டும். காரணமின்றி விசாரணைசெய்ய முடியாது. உயர் நீதிமன்றில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் ரணிலின் பெயர் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அதனால் அவர் நாடாளுமன்றில் தெளிவுபடுத்தவேண்டியவராகவுள்ளார். நான் அவ்வாறு உரையாற்றவேண்டிய அவசியமில்லை. நான் திருடன் என்று எங்கும் கூறப்பட வில்லை. இதேவேளை, அரசின் கட்சிகளும், ரணிலும் நாடாளுமன்றில் செயற்பட்ட விதம் மிகவும் தவறானதாகும். எமது உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இவை பிழையானவை யாகும். மரிக்கார் போன்றவர்கள் வயது கூடிய மூத்த உறுப்பினர் காமினி லொக்குகேயை தாக்குகின்றனர். தமது தந்தைக்கு தாக்குதல் மேற்கொள்ளும் வகையிலான செயற்பாடே அது. இது வெறுக்கத்தக்கதாகும். இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், அதனை அவர்கள் செய்ய மாட்டார்கள் - என்றார். (5)

# அபிவிருத்தியுடன் கூடிய உரிமையே அவசியம்

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

உரிமையைக் காகிதத்தில் மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?. எமது மக்களுக்கு அபிவிருத்தியுடன் கூடிய உரிமையே தற்போது அவசியம். இவ்வாறு தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிக்கை வெளியீடும், வேட்பாளர் அறிமுக நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணம் நகரத்தில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்களுக்குச் சேவை செய்யும் எண்ணத்துடன் பலர் பல இடங்களில் இருந்து எமது கட்சிக்கு வந்துள்ளனர். அதற்குக் காரணம் நாங்கள் சரியான பாதையில் செல்வதே.

தற்போதைய கால கட்டத்தில் தமிழ் தலைமைகள் கூறுவதற்கும் மக்கள் எதிர்பார்ப்பதற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எமது சமூகத்தில் தற்போது போதைப் பொருள் பாவனை கலாசாரச் சீர்கேடுகள், வேலையில்லாப் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன. இவை எமது இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன. வேலையில்லாப் பிரச்சினை தொடர்பில் சம்பந்தன் எதுவும் செய்ய முடியாது என சொல்கின்றார். அரச தலைவர் சட்டத்தரணி பதவி பெற்றுக் கொடுக்க முடிகின்றது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமக்கு வாக்களியுங்கள் எனக் கோரி பல சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. ஆனால் அவர்கள் எதனைச் செய்தார்கள்?.

நாம் மக்களின் கிராமிய அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் மேற்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். அதற்குத் தேவையானவற்றைச் செய்ய நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார். வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், காணாமல் போனோர்களின் குடும்பத்துக்கு உதவுதல், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல், நகரசபை மற்றும் மாநகர சபை வளங்களைப் பயன்படுத்தி தொழில் வாய்ப்புக்களை இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல், அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. (ந.ரி4,32,106)

# கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

முல்லைத்தீவு.ஜன.13

இந்தத் தேர்தலை கட்சியின் தேர்தலாகவோ அல்லது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வற்கான தேர்தலாகவோ மட்டுமன்றி ஒரு அரிய சந்தர்ப்பமாக நோக்குங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச சபையின் மல்லாவி 5 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் ம.தெய்வேந்திரனையும் சு.உமாதேவியையும் ஆதரித்து நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நீண்ட காலமாக எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாமல் எல்லாவிதங்களிலும் புறக்கணிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களும் அபிவிருத்தியைக் காணவேண்டிய தேவை இருக்கிறது.

எமது பகுதி அபிவிருத்திக்காக தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என - தம்மை அழைத்தவர்கள் எந்த அபிவிருத்தியையும் முன்னெடுக்கவில்லை. எனவேதான் எமது பகுதி அபிவிருத்தி, எமது எதிர்காலம் என்பவற்றை கருத்திற்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து போட்டியிட முடிவெடுத்தேன் - என்றார்.

# சரியானவாறு தேர்தலை பயன்படுத்த வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

மக்கள் சொந்தக் கால்களில் நின்று தமது வாழ்வியலை மேம்படுத்துவதற்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபை வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். மாநகர சபையை நாம் ஆளுகை செய்த போது நகரின் சுத்தம் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்தது மட்டுமல்லாது தமிழ் மன்னர்களுக்கும் தமிழ் மக்களை பாதுகாத்த பெருந்தகையாளர்களுக்கும் சிலைகள் அமைக்கப்பட்டன. பல்வேறுபட்ட பெரும் பணிகளைச் செய்து காட்டியிருந்தோம். தேர்தலில் மக்கள் எமது வீணைச்சின்னத்துக்கு ஆணையை வழங்குவார்களேயானால் அவர்களுடைய தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களது எண்ணக் கனவுகளை ஈடேற்ற நாம் உழைப்போம் - என்றார். (ற)

## சிப்பாயின் மனிதாபிமானம்

கொழும்பு,ஜன.13
விபத்தில் சிக்கியவரின் உயிரைக் காப்பற்றப் போராடியதுடன் விபத்தை ஏற்பத்திய வாகனத்தையும் பொலிஸாருக்கு அடையாளம் காட்டியுள்ளார் இராணுவச் சிப்பாய் ஒருவர்.

இச் சம்பவம் நேற்று தெமட்டகொடப் பகுதியில் இடம்பெற்றது.

இராணுவப் பணியகத்தில் சேவையாற்றும் இலங்கை சமிக்ஞை படையணியைச் சேர்ந்த மனதுங்க என்ற சிப்பாயே இந்த மனிதாபிமானச் செயலைச் செய்துள்ளார்.

சாலையைக் கடக்க முற்பட்ட தேங்காய் வியாபாரியின் தள்ளு வண்டியை காரொன்று மோதியது. அதில் தேங்காய் வியாபாரி படுகாயமடைந்தார்.

சம்பவத்தைக் கண்ட சிப்பாய், வியாபாரியை மருத்துவமனையில் சேர்த்ததுடன் விபத்தை ஏற்படுத்திய காரின் இலக்கத்தையும் பொலிஸாருக்குத் தெரியப் படுத்தினார்.

இதனையடுத்து சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர். (ரி2)

### பிணைமுறி மோசடி அறிக்கை மீது

# சட்டமா அதிபர் கழுகுப்பார்வை

### தீவிரமாக ஆராய்கிறது விசேட குழு

கொழும்பு, ஜன.13
மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக எந்தச் சட்டப் பிரிவின்கீழ், எத்தகையை நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என அறியமுடிகின்றது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட குழு, வெளிநாட்டு சட்டதிட்டம் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தியுள்ளது எனவும் தெரியவருகின்றது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளித்தது.

ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட பக்கங்களைக்கொண்ட மேற்படி அறிக்கையின் உள்ளடக்கங்களை மையப்படுத்தி ஜனாதிபதியால் அண்மையில் விசேட அறிவிப்பொன்று விடுக்கப்பட்டது. அத்துடன், குற்றவாளிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்குமாறு கோரி குறித்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்பிரகாரமே அறிக்கை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என்றும், விரைவில் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளது என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோசடி இடம்பெற்றதாகக் கருதப்படும் காலப் பகுதியில் மத்திய வங்கி ஆளுநராகச் செயற்பட்டவர் வெளிநாட்டுப் பிரஜை என்பதால் சட்ட நடவடிக்கை எடுப்பதிலுள்ள சிக்கல் நிலைமை குறித்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சிறப்புரிமைகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது. (ற)



## விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஜன.13
புத்தூர் சந்தியில் நேற்று நடந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி சமிக்ஞை போடாது திடீரெனத் திருப்ப முற்பட்ட போது பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த புத்தூர் கலைமகள் பகுதியைச் சேர்ந்த செல்வக்கண்டு ரூபன் (வயது23) என்ற இளைஞனே அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ற-64)

## மணல் ஏற்றிய நால்வர் கைது


தென்மராட்சி,ஜன.13
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நால்வர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தூர்,மீசாலை வீதியில் வைத்து அச்சுவேலிப் பொலிஸாரால் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

கிளிநொச்சி,வளலாய், பளை பகுதிகளைச் சேர்ந்த 30, 34, 33, 36 வயதுடையவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

டிப்பர் வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ரி2-26)





## விபத்தில் இருவா் படுகாயம்

மட்டக்களப்பு, ஜன.13



புதுக்குடியிருப்பு கிரான்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

ஏறாவூர் நோக்கி வேகமாக பயணித்த பட்டா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் உள்ள மரத்தை மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஏறாவூரைச் சேர்ந்த எம்.ஏ.அஸீர்கான்(வயது23) மற்றும் வே.நித்தியானந்தம்(வயது38) ஆகியோர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை, ஜன.13
தொண்டமனாறு வீரகத்தி மகாவித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இதில் 30 பேருக்கு சீருடைகளும், 10 பேருக்கு வீதி போக்குவரத்து அங்கிகளும் வடக்கு மாகாண சிறப்பு பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதனால் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் பழைய மாணவியான சுவிஸ் நாட்டில் வசிக்கும் உதயகுமார் சோதிஸ்வரியால் மாணவர்கள் 16 பேருக்கு காலணிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எஸ் குமாரசேன மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-26)


## விபத்தில் மாணவன் படுகாயம்

ஹற்றன்,ஜன.13
ஹற்றன் நுவரெலியா பிரதான வீதி, தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அருகில், நேற்று இடம்பெற்ற விபத்தில், பாடசாலை மாணவரொருவர் படுகாயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்தில் சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் சுவிஷன் (வயது 11) என்ற மாணவனே படுகாயமடைந்தார். மாணவன், வீதியைக் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டே விபத்துக்குள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)







திருகோணமலை மாவட்ட இந்து மாமன்றம் நடத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வின் வெள்ளி விழா நிகழ்வு நேற்றுத் திருகோணமலை மாவட்ட இந்து மாமன்றத்தின் தலைவர் கலாபூஷணம் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை சிவன் கோயிலில் இருந்து தமிழர் சைவப் பண்பாட்டு பேரணி ஆரம்பமாகி திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நிறைவடைந்தது. (ற-ரி5)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஆசை யாரைத்தான் விட்டது?

அரசதலைவராகத் தனது பதவிக் காலம் எப்போது முடிவடைகின்றது என்று உயர் நீதிமன்றத்திடம் கருத்துக் கேட்டிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன. அவரது இந்த முடிவு ஆச்சரியத்தையும் விசனத்தையும் ஒருங்கே ஏற்படுத்துகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் பதவியை இல்லாது ஒழித்து புதியநாட்டைக்கட்டியெழுப்புவதற்கான இடைத் தரகராகத்தான் மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு பதவிக்குக் கொண்டுவரப்பட்டார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை ஆட்சியிலிருந்து அகற்றும் அதேநேரம் நாட்டின் சாபக்கேடாக மாறியிருக்கும் நிறைவேற்று அரசதலைவர் முறைமையை ஒழிப்பதற்காகவும்தான் அந்தப் பதவி பற்றிய எண்ணம் ஏதுமற்றிருந்த மைத்திரிபாலசிறிசேனதெரிவு செய்யப்பட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பனவும் அதனடிப்படையிலேயே மைத்திரிக்கு ஒருமித்த ஆதரவு தெரிவித்திருந்தன.

ஆரம்பத்தில், தான் மற்றொரு பதவிக் காலத்துக்கு ஆசைப்படப் போவதில்லை என்று மைத்திரி திரும்பத் திரும்பக் கூறிவந்தார். தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதியளித்தது போல இந்தப் பதவிக் காலத்துடனேயே தான் பதவியில் இருந்து அகன்றுவிடுவார் என்றும் அவர் வாக்குறுதியளித்தார்.எனினும்சிறிதுகாலத்தின்பின்னர்இந்தநிலைப்பாட்டில் அவர்தொடர்ந்தும்உறுதியாகஇருக்கிறாராஎன்கிறசந்தேகம் எழவே செய்தது.

கட்சிஅரசியல்இடையில்புகுந்துகொண்டநிலையில்இந்த விவகாரம்ஆரம்பத்தில்இருந்ததுபோன்றதெளிவானநிலையில்தொடரவில்லைஎன்பதுதெரிந்தது.நாடாளுமன்றத்தை ஐக்கியதேசியக்கட்சிதனதுகட்டுப்பாட்டில்வைத்திருக்கும் நிலையில்அதனைஈடுசெய்யும்வகையில்அரசதலைவரின் அதிகாரங்கள் குறைக்கப்படக்கூடாது என்கிற கருத்து சுதந்திரக் கட்சியினரிடம் இருந்து கிளம்பத் தொடங்கியது.

புதிய அரசமைப்புத் தொடர்பான பேச்சுக்களில்கூட இந்த நிலைப்பாட்டையேசுதந்திரக்கட்சிதொடர்ந்துவலியுறுத்தி வருகிறது என்பதையும் கவனித்தாகவேண்டும்.

இதன் விளைவாக 19ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது அரச தலைவர் மைத்திரிபால பதவியில் இருக்கும்வரைக்கும்அவரிடம்சிலபலஅதிகாரங்கள்இருக்கத்தக்க வகையில்சட்ட ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் புதிய அரசதலைவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்மட்டுமே என்பதும் மட்டுப்படுத்தப்பட்டது. அப்போது இது தொடர்பில்எதுவும்பேசாதிருந்தஅரசதலைவரும் தற்போது தனது பதவிக் காலம், திருத்தத்துக்கு முன்னரான அரசமைப்புப்படி 6 ஆண்டுகளா அல்லது 5 ஆண்டுகளா என்று உயர் நீதிமன்றிடம் கேட்கிறார்.

இவருக்கு முன்னர் இந்தப் பதவியிலிருந்தவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க குமார ரணதுங்கவும் மகிந்த ராஜபக்சவும்கூட நிறைவேற்று அதிகாரஅரசதலைவர்முறைமையை ஒழிப்பதாகக்கூறித்தான் பதவிக்கு வந்தார்கள். ஆனால், கடைசிவரையில்அதனைச்செய்யவில்லை.அதனால்தான் அந்தப் பதவியை இல்லாமல் செய்யும்போது அந்தப் பதவி குறித்த எதிர்பார்ப்பு ஏதுமின்றியிருந்த மைத்திரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு மாற்றத்தை நிகழ்த்தும் பொது மனிதராகவே அவர் இந்தப் பதவிக்கு அழைத்து வரப்பட்டார். அது அவர் அந்தப் பதவியில் ஆசைப்படமாட்டார் என்கிற எதிர்பார்ப்பின் பேரிலேயே நடந்தது. ஆனால், அந்த எதிர்பார்ப்புகள் இப்போது பொய்த்துப்போய்விட்டன. மேலும் ஓர் ஆண்டு பதவியில் நீடிக்கும் ஆசை மைத்திரிபால சிறிசேனவுக்கு வந்துவிட்டது.கட்சிஅரசியலின்நெருக்கடியால்அவர்இந்த முடிவுக்கு வந்தார் என்று காரணம் கற்பிக்கப்படக்கூடும். எந்தக் காரணமாக இருந்தாலும் பதவி ஆசை வந்த பின்னர் அது ஒருவரை எப்படி ஆட்டிப் படைக்கும் என்பதை இந்த நாடு இரு அரசதலைவர்களின் காலத்தில் பார்த்துவிட்டது. எனவே மைத்திரியின் இந்த ஆசையும் என்னென்ன விபரீதங்களைஏற்படுத்துமோஎன்கிறஅச்சத்தைத்தான்ஏற்படுத்துகின்றது.

# கூட்டு ஆட்சித் தலைவர்களது வாக்குறுதிகளின் கதி என்னாச்சு?

மு. ஈழத்தமிழ்மணி

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதிநாட்டில்நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்து பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிபாலசிறிசேன தமிழ்மற்றும் முஸ்லிம் மக்களின் அதிகப்படியான ஆதரவு வாக்குகளால் பெரு வெற்றியீட்டி அரசதலைவராகப் பதவியேற்று மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன.



வடக்கு-கிழக்குமாகாணங்களில் உள்ள தமிழ் மக்கள் மகிந்தராஜபக்சஅரசை வெளியேற்றிமாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்குடன் மைத்திரிபாலவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்றிணைந்து நல்லாட்சி என்ற பெயரில் கூட்டு அரசுபொறுப்பேற்று100நாள்வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கூட்டு அரசுக்கு தமிழ்தேசியக்கூட்டமைப்பும் விரும்பியோ,விரும்பாமலோ தனது ஆதரவை இன்றுவரை வழங்கி வருகின்றது. மூன்று வருடகால ஆட்சிமுடிவடைந்து அரசு தனது நான்காவதுவருடஆட்சியை ஆரம்பித்துள்ளநிலையில், தமிழ்மக்களின் இனப்பிரச்சினை மற்றும் அடிப்படைப்பிரச்சினைகளுக்கான தீர்வு விடயத்தில் மைத்திரி அரசு ஆர்வம் காட்டாது புறம் போக்காகவே நடந்து வருகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

> கூட்டு அரசு, பெரும்பான்மை சிங்கள மக்களையும், படைத்தரப்பையும் திருப்திப்படுத்துவதிலும், பன்னாட்டுச் சமூகத்திடமிருந்தும் எழுகின்ற கேள்விகளுக்கு முரண்பாடான பதில்களை வழங்குவதிலும் இன்றுவரை காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றது.

## சிங்கள மக்களையும் படையினரையும் திருப்திப்படுத்தும் நோக்கில் செயற்படுகிறது கூட்டு அரசு

கூட்டு அரசு பெரும்பான்மை சிங்கள மக்களையும், படைத்தரப்பையும்திருப்திப்படுத்துவதிலும், பன்னாட்டுச்சமூகத்திடமிருந்து எழுகின்ற கேள்விகளுக்கு முரண்பாடான பதில்களை வழங்குவதிலும் இன்றுவரை காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றது. தமிழ்மக்களின் உரிமைகளை மறுத்துவரும் கூட்டு அரசு , சமூகத்தின் மத்தியில் தனது போலி முகத்தைக் காட்டி பன்னாட்டுச் சமூகத்தையும் ஏமாற்றி வருவதாக தமிழ்மக்கள் முற்று முழுதாக நம்புகின்ற நிலையில், தற்போதைய கூட்டு அரசு மீதான நம்பிக்கையையிழந்து தமிழ் மக்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிட்டுள்ளனர்.

இலங்கை அரசியலில் கொழும்பு ஆட்சியாளர்கள்தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்குத்தீர்வேதும் காணாது அதனை இழுத்தடிக்க முயல்வதும், காலத்தைக்கடத்திவருவதும், தமிழ்மக்களுக்கு இந்தநாட்டில் என்னதான் பிரச்சினை இருக்கிறது என்று கேள்வி கேட்பதும், புதிய விடயங்களல்ல.

70ஆண்டுகளாகமாறிமாறிஆட்சிக்குவருகின்ற ஐக்கிய தேசியக்கட்சி, மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசுகள், எப்படி தங்கள் இஷ்டம் போல் தமிழர்கள் பிரச்சினைகளைக் கையாண்டார்களோ அதைப் போன்றே கூட்டு அரசும் அந்தப் போக்கிலேயே நடந்து வருகின்றது.

கூட்டுஅரசின்நிர்வாகத்தில்தமிழ்மக்களதுபிரச்சினைக்கு விமோசனம் கிடைக்கும். புதிய அரசு மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என தமிழ்த்தலைமைகள் எவ்வளவுதான் எடுத்துக்கூறினாலும் தமிழ் மக்கள் எந்த ஆட்சித்தரப்பினரையும் நம்பத் தயாரில்லை என்பதை இந்தக் கூட்டு அரசின் மூன்று வருடகால ஆட்சி தெட்டத்தெளிவாக உணர்த்தி வைத்துள்ளது.

இந்தஅரசில்அங்கம்வகிக்கும்அமைச்சர்களின் செயற்பாடுகளும்,பேச்சுக்களும்தமிழ்மக்களை ஏமாற்றுவதும், குழப்புவதுமாகவே இருக்கின்றன. கடந்த வருடம் தமிழ்மக்கள் காணாமல் போன தமதுஉறவுகள் தொடர்பில் கண்டறிந்து உண்மை நிலையைச் சொல்லுங்கள் எனக் கேட்டு போராட்டங்களை வருடம் முழுவதும் பலகோணங்களில் நடத்தியிருந்தனர். பூர்வீக நிலங்களை விடுவிக்காது அரச படைகள் அவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு இருப்பது எந்த வகையில் நியாயம் எனக்கேட்டும் சாத்வீகப் போராட்டங்களைச் சளைக்காது முன்னெடுத்திருந்தனர்.

## இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் பல ஏக்கர் காணிகள் படையினர் வசம்

இன்றையகூட்டுஅரசானதுபன்னாட்டுச்சமூகத்தின் அழுத்தம் காரணமாக முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் படையினர் ஆக்கிரமித்திருந்த காணிகளில் சில

வற்றை விடுவித்திருந்தாலும், இன்னமும் பொதுமக்களது பலநூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகள் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. படையினரோ, தேசியபாதுகாப்பு கருதி அக்காணிகளை மக்களிடம் திருப்பிக்கொடுக்க முடியாது எனக் கையை விரிக்கின்றனர். படையினர்தேசியபாதுகாப்பைக்காரணம் காட்டிதமிழ் மக்களின் காணிகளில் விவசாயம்செய்கின்றனர். வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பரம்பரை நிலங்களை படையினர் தமதுடமையாக்கிக் கொண்டு அவற்றை கடந்த பல ஆண்டுகள் காலமாக கையகப்படுத்தி வைத்திருப்பது, விடுவிக்காமல் சொந்தம் கொண்டாடுவது பெரும் மனித உரிமை மீறல் என்று தமிழ் மக்கள் தரப்புகள் மட்டுமன்றி பன்னாட்டுச் சமூகமும் தீவிரமாகக் குற்றம் சாட்டி வருகின்றன. இன்றையகூட்டுஅரசு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தேவையானஅடிப்படைவசதிகளைச் செய்துகொடுக்கத்தவறிவிட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் நியாயமானபோராட்டங்கள்குறித்து அக்கறைகாட்டிசெயற்படவும்தவறிவிட்டுள்ளது. 30 வருடகாலப்போர் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள மக்கள்போர்முடிவுக்குவந்தபின்னரும் கூடஇயல்புவாழ்க்கைக்குத்திரும்ப முடியாமல் ஏக்கப் பெருமூச்சுடன் முகாம்களிலும் பிற இடங்களிலும் தொடர்ந்தும் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிக்கின்றனர்.


**இந்தப் புதிய ஆண்டிலாவது தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்க்க கூட்டு அரசு அக்கறை காட்டுமா?**

மலர்ந்திருக்கும் இந்தப்புதிய ஆண்டிலாவது கூட்டு அரசு தமிழ்மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத்தவறினால், அது மக்களை மிகுந்த விரக்தி நிலைக்குஇட்டுச்செல்வதுடன், அரசு மீதான வெறுப்புணர்வையும் ஏற்படுத்தும். இவையாவும் தவிர்க்க முடியாததாகி விடும். ஏற்கனவே இந்தக்கூட்டுஅரசுமீதுதமிழ்மக்கள் நம்பிக்கையிழந்துவருகின்றநிலையில், மைத்திரிபால சிறிசேன எந்த முகத்துடன்தமிழ்மக்களைச்சந்திப்பார்? இந்தக்கூட்டுஅரசால்தமிழ்மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடையாது என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் வருவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

முன்னை நாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க போர் முடிவுக்கு வந்துஎட்டுவருடங்கள்கழிந்தநிலையிலும், அரசால் தமிழ்மக்களது மனங்களைவெல்லமுடியவில்லையென கடந்த தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டித் தாம் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் வைத்துக்குறிப்பிட்டிருந்தார். போர் காரணமாக விரக்தியுற்ற தமிழ் மக்களது உள்ளங்களைச் சீர் செய்யும் பணிகளை இன்றைய கூட்டு அரசு செய்து வருவதாக அவர் குறிப்பிட்டிருந்த போதிலும், யதார்த்தத்தில் அத்தகைய சமிக்ஞை எதனையும் காண முடியவில்லை.

கூட்டு அரசின் மூன்று ஆண்டுகால நிர்வாகத்தில்பாதிக்கப்பட்டதமிழர்களின் பிரச்சினைகளில் எவைதான் சீர்செய்யப்பட்டிருக்கின்றன? காணாமல் போனோர் விடயத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க என்னகூறினார்கள்என்பதைமறந்துவிட்டனரா தமிழ்மக்கள்? அரசதலைவர், தலைமை அமைச்சர், முன்னை நாள் அரசதலைவர் சந்திரிகா போன்றோர் கூட்டு ஆட்சி அரசின் மூன்று ஆண்டு கால நிர்வாகத்தில் யாழ்ப்பாணத்துக்குப் பல தடவைகள்வந்துதிரும்பியிருந்தபோதிலும் அவர்களால் தமிழ் மக்களின் மனங்களைவெல்லமுடிந்ததா?

இன்றைய கூட்டு அரசும் சிறுபான்மையினரான தமிழ்மக்களுக்கு எந்தவிதமான உரிமைகளையும் வழங்கிவிடக்கூடாது என்பதில் தென்னிலங்கையிலுள்ள கடும் இனம் வாதப்போக்காளர்களும், மகிந்ததரப்புஅணியினரும்நெருக்கடிகளைக் கொடுத்து வரும் நிலையில், கூட்டுஅரசுஇப்படிப்பட்டநெருக்கடிகளைத்தூக்கியெறிந்து விட்டு தமிழ்மக்களின் பிரச்சினைகளை துணிச்சலோடும், நேர்மையோடும் தீர்த்து வைப்பதற்கு தனது மிகுதி ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக முன்வருமா? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தாலும், மைத்திரி அரசு வழங்கியவாக்குறுதிகள்ஒன்றுகூட இதுவரையில் பூரணமாக நிறை வேற்றப்பட்டதில்லை என்ற உண்மை பூதாகாரமாகத் தலைதூக்கி நிற்கிறதே?





**இன்றைய கூட்டு அரசும், சிறுபான்மையினரான தமிழ்மக்களுக்குஎந்தவிதமான உரிமைகளையும் வழங்கிவிடக்கூடாதுஎன்பதில்தென்னிலங்கையிலுள்ள கடும் இனம் வாதப்போக்காளர்களும், மகிந்த தரப்பு அணியினரும் நெருக்கடிகளைக் கொடுத்துவரும்நிலையில்கூட்டு அரசு இப்படிப்பட்ட நெருக்கடிகளைத்தூக்கியெறிந்துவிட்டுதமிழ்மக்களின் பிரச்சினைகளை துணிச்சலோடும், நேர்மையோடும்தீர்த்துவைப்பதற்குதனதுமிகுதிஆட்சிக்காலம்முடிவடைவதற்குமுன்பாகமுன்வருமா?**

தமிழ் மக்களின் மனிதாபிமான சிறிய தேவைகளைக் கூடக் கையாள முடியாது இன்றைய கூட்டு அரசு பின்வாங்கிவருகின்றதோஎன்ற அச்சம், கவலை தமிழ்மக்கள் மத்தியில் நிறையவே உள்ளன.

**பரப்புரைக்கு வடபகுதிக்கு வரும் அரச தலைவர் வழமையான வாக்குறுதியையே அவிழ்த்துவிடப் போகிறார்**

உள்ளூராட்சித்தேர்தல்பரப்புரைக்காக வட பகுதிக்கு வரவிருக்கின்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவும் தமிழ்மக்களின் பிரச்சினைகள்தொடர்பாகஎன்ன சாக்குப்போக்கு, நொண்டிச் சாட்டுக்களைமுன்வைத்து தம்மைத் தக்க வைத்துக் கொள்ளப்போகின்றனரோ என்றகேள்விதமிழ்மக்கள் மத்தியில்தலைதூக்கிநிற்கிறது.

ஆனாலும் முழுப்பூசணிக் காயைச் சோற்றில் புதைப்பது போன்று, ஏதாவது புனைகதைகளை இட்டுக் கட்டி தமிழ்மக்கள் காதுகளில் பூச்சுற்றித் தத்தமது தரப்புகளுக்கான வாக்கு வேட்டையைஇவர்கள்முன்னெடுக்கத்தான் போகின்றார்கள். அந்த வகையில் அவர்களது வழமையான பொய் வாக்குறுதிகளுக்கு தாளம் போட எமது தரப்பிலும் ஒரு கூட்டத்தினர் தயாராக உள்ளனர் என்பது தான் நிதர்சனம்.

தமிழ்மக்களின்தற்போதைய அடிப்படைப்பிரச்சினைகளுக்கும், அவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த நியாயமான போராட்டங்களுக்கும் இன்றைய கூட்டு அரசு என்ன பதிலைக் கொடுக்கப் போகின்றது. தமிழர்களின் மனதை வெற்றிகொள்ளும் வகையில் ஜனாதிபதியின் வருகை அமையுமா? அல்லது ஏமாற்றம்தான் மிஞ்சுமா?

தமிழ் மக்களின் கடந்த வருடப்போராட்டங்களும், வேண்டுதல்களும் இன்றைய கூட்டு அரசால் புறந் தள்ளப்பட்டே வருவதனால், இந்த வருடமும் தமிழ்மக்களின் தொடர் போராட்டங்கள் முழு வீச்சாக முன்னெழுவதுதவிர்க்கமுடியாததாகும் என்பதில் சந்தேகம் கிடையாது.



## ஆசிரியருக்கான கடிதம்

### மனமுண்டானால் இடமுண்டு

ஒரு காலத்தில் எமனானவன் பூமியில் நடமாடவே முடியாதவாறு எதிர்ப்புகளும், ஒழுங்கமைப்பும், நீதி நியாயமும், நாணயமும், நம்பகத்தன்மையும் மேலோங்கி ஆளுமை பெற்றிருந்தன. ஆதலால் எமன் பூமியில் முகாமிட்டு இருந்ததில்லை. இதனால் சாவுகள் எப்போதாவது அரிதாக அங்கொன்று இங்கொன்றுமாக விரல் விட்டு எண்ணக்கூடிய தாகவே இருந்தன. இன்றைய காலகட்டத்திலோ எமனும் அவனது பரிவாரங்களும் பூமியிலே முகாமிட்டு நிர்வாகம் செய்கின்றனர். அதற்கேற்றாற்போல் அளவுக்கு அதிகமான வாகனங்களின் அடாவடித்தனங்களும், மோசமான ஓட்டுநர்களின் சாகச விளையாட்டுக்களும், இளமைக்கு இறைவன் தந்த அதீத துடிப்பும், இறக்குமதியாகும் போதைகளுமே எமனுக்கும் அவனது பரிவாரங்களுக்கும் அவர்களது தொழிலை இலகுபடுத்தி உதவுகின்றன.

இதைவிட அக்கம் பக்கம் அகலிக்கப்படாத மட்டு மட்டான வீதிகளும், போக்குவரத்துச் சட்ட திட்டங்களை மதிக்காத சண்டித்தனங்களும், முதிர்ச்சி பெறாத வயதுக்கோளாறுகளும், எமனுக்கு அழைப்பு விடுக்கின்றன.

இதைவிட நோகாமல் கொள்ளாமல் மாதா மாதம் வெளிநாடுகளிலிருந்து வீடு வந்து சேரும் எக்கச்சக்கமான பணத்தைக் கொண்டு என்னசெய்ய வேண்டும்? ஏதுசெய்ய வேண்டும் ?என்ற கோட்பாடு புரியாத குடும்பங்கள் அவசர அவசரமாகத் தத்தம் பிள்ளைகளுக்கு வயது, தொழில் பாராமல் அதிவேக வாகனங்களை வாங்குவதற்கு இடமளிப்பதும், ஊக்கப்படுத்துவதுமே வீதிகளில் பலரும் இரையாக ஒரு வகையில் காரணமாக அமைகின்றன.

எமது நாட்டிலே நாற்பது இலட்சம் மோட்டார் சைக்கிள்கள் வீதியோடு போராடிக் கொண்டிருக்கின்றன. இதைவிட பதினாறு இலட்சம் முச்சக்கரவண்டிகள் வீதிகளில் எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு வீதியை முந்திச்செல்ல ஆயத்தமாகின்றன. கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 2,620,012 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்குமப்பால், நாள்தோறும் 8ஆயிரத்து 800 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இத்தகைய நிலையில் அத்தனை இத்தனை வாகனங்களும் சொல்லப்படாத பெரிய வாகனங்களும், எமனாகி, மனித வம்சத்தையே துவம்சம் செய்வதற்கு வீதிகள் மட்டுமல்ல விதிகளுமே கங்கணம் கட்டி நிற்கின்றன. இதனை நாம் வெல்ல முடியாதா?

மனமுண்டானால் இடமுண்டு என்று கூற மட்டுமே முடிகிறது.

கே.எஸ்.சிவஞானராஜா.

# கல்லுண்டாய் குப்பை மேட்டை சுற்றி வேலி அமைக்கவும்

## மல்லாகம் நீதிமன்று கட்டளை

யாழ்ப்பாணம், ஜன. 13

கல்லுண்டாய் குப்பைமேட்டைச் சுற்றி 3 மாதங்களுக்குள் சுற்றுவேலி அமைக்கப்படவேண்டும். குப்பை மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை எரிக்காத வகையில் முகாமை செய்யவேண்டும். மலக்கழிவுகள் கொட்டக்கூடாது என்று மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கல்லுண்டாயில் முன்னர் பல பிரதேசங்களிலிருந்தும் குப்பை கொண்டுவந்து கொட்டப்பட்டது. அதனால் அந்த இடம் குப்பை மேடாகியதோடு துர்நாற்றமும் வீச ஆரம்பித்தது. அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அந்த விடயம் பொதுமக்கள் சிலரால் மல்லாகம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்குத் தொடுநர் தரப்பில் சட்டத்தரணி சுகாஸ் முற்பட யாழ்ப்பாண மாநகர சபை சார்பில் சட்டத்தரணி இராஜரட்ணம் முற்பட்டார்.

அதன்போது மேற்குறித்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.



இந்தக்கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது பற்றிய கவனிப்புக்காக இந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(எ-4)

---

## விற்பனைக் கூடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாண மாவட்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனைக் கூடம் ஒன்று இன்று சனிக்கிழமை அரியாலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் இந்த விற்பனைக் கூடம் அரியாலைபுங்கங்குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டிடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது. (21,17)

---

## தவறவிடப்பட்ட திறப்பு கோர்வையை பெற்றுக்கொள்க

சாவகச்சேரி ஜன.13

கொடிகாமம் பகுதியில் பொதுமகனால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திறப்புக் கோர்வையைத் தவறவிட்டவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட திறப்புக் கோர்வை பொலிஸாரால் நேற்று நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

---

## சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை வழக்கு: ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

சிறுப்பிட்டி இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 12ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் ஒத்திவைத்தது.

கடந்த 1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் 16 இராணுவத்தினரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் கடந்த 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் 16 இராணுவத்தினருக்கும் பிணை வழங்கியது.

அதன் பின்னர் வழக்கு விசாரணைகள் இன்றி கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரிக்குமாறு சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு கடந்த 2016ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்திருந்தனர். இந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின்னர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 9 இராணுவத்தினர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஏனைய 5 இராணுவத்தினருக்கும் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் கடந்த வருடம் பிணை வழங்கியது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் 5 பேரும் மன்றில் முன்னிலையாகினர்.

குறித்த வழக்கை முன்னெடுப்பதற்கு மன்னார் மாவட்ட அரச சட்டவாதி சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டார். அவர் தற்போது கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். அதனால் வேறொரு அரச சட்டவாதி விரைவில் நியமிக்கப்படுவார் என சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. எனவே வழக்கு விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு அச்சுவேலி பொலிஸார் மன்றில் விண்ணப்பம்செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தையடுத்து வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (எ-26)

---

## விபத்தில் இறந்த இளைஞர்களது சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம்.ஜன.13

கிளிநொச்சி ஏ9 வீதியில் கொக்காவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற கோரவிபத்தில் இறந்த வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த 4 இளைஞர்களதும் சடலங்கள் பலத்த சோகத்தின் மத்தியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஒன்றாகத் தகனம் செய்யப்பட்டன.

அல்வாய் கிழக்குப்பகுதி தாமன் தோட்டம், பத்தானை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களான சந்திரசேகரம் ஜெயச்சந்திரன் (வயது37) நவரத்தினம் அருண் (வயது 21) சின்னத்துரை கிருஸ்ணரூபன் (வயது 18) சிவசுப்பிரமணியம் சிந்துஜன் (18 வயது) ஆகியோரே உயிரிழந்தனர்.

நால்வரது சடலங்களும் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையிலிருந்த கடந்த புதன்கிழமை மாலை அல்வாய்க்கு எடுத்தவரப்பட்டு அவரவர் இல்லங்களில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் மாலுசந்தியில் உள்ள அல்வாய் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் பொது அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெற்றன.

(எ-173)

---

## கால்கோள் விழா

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் தரம் 1இல் பிரவேசிக்கும் பிஞ்சு உள்ளங்களை வரவேற்கும் கால்கோள் விழா நாளை மறுதினம் காலை 8 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியை க.சிவபாதசுந்தரமும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

**********************************************************

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கால்கோள் விழா நாளை மறுதினம் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற வுள்ளது. பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஸ்ரீபாத கல்லூரி விரிவுரையாளர் சி.க. கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-122)

**********************************************************

யாழ்ப்பாணம் நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் கால்கோள் விழாவும், பொங்கல் விழாவும் பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமைகாலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வி. கருணலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளு மாறு பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (எ-4)

**********************************************************

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலையில் தரம் 1 மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கால்கோள் விழா பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) ச.அரியநாயகமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய அபிவிருத்தி அலுவலர் ச.தனுராஜும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

---

*கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்தவுடனே பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன என*

## இலங்கை ஆசிரியர் சங்கம் வைத்த கோரிக்கை விளக்கமில்லாத ஒன்றே!

### வடமாகாண கல்வி அமைச்சர் காட்டம்

யாழ்ப்பாணம்.ஜன.13

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் புதிய கல்வி ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்தவுடனே மாணவர்களுக்கு பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் முன்வைத்த கோரிக்கை விளக்கமில்லாத ஒன்று. இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் இ.சர்வேஸ்வரன். மாகாண கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளார் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அண்மையில் புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைக்காக ஆரம்பித்தன. ஆரம்பித்து ஒரு வார காலத்துக்கள் அவர்களுக்கு அமைச்சின் பரீட்சைகள் நடைபெற்றன. இது மாணவர்களைப் பாதித்துள்ளது என்று இலங்கை ஆசிரியர்சங்கம் அறிக்கை வெளியிட்டது. இதை நான் அறியாமை என்றே கூறுவேன். தரம் ஒன்று முதல் 5 வரையில் கல்வி கற்கும் மாணவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளோம். முதலாம், இரண்டாம் வகுப்புக்களை முதல் பிரிவாகவும், மூன்றாம், நான்காம் வகுப்புக்களை இரண்டாம் பிரிவாகவும், தரம் ஐந்தை மூன்றாம் பிரிவாகவும் பிரித்து அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை தனியாகக் கண்காணித்து வருகின்றோம். நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளைப் பெற்றவர்கள் 30 வீதத்தை விடவும் குறைவு. அவர்களில் எழுத்து கூட சரியாக எழுத தெரியாதவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள்.

இந்த நிலமையைத் தரம் ஒன்றில் கல்வி கற்கும் போது கண்டுபிடித்து அதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும்.

இந்தத் தவறு மீண்டும் நடக்கக் கூடாது என்பதற்காகவே அந்த ஆரம்ப கட்ட பரீட்சைகள் நடைபெற்றன.

அதாவது தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை கல்வி பயிலும் மாணவர்களின் இலக்கு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையாகும். ஆகவே தரம் ஒன்றில் மாணவர்கள் எந்த நிலையில் இருந்து ஆரம்பிக்கின்றார்களோ அதுவே தரம் ஐந்தில் வெற்றியாக அமையும், இதனை கருத்திற் கொண்டு ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவர்களின் எழுதும் ஆற்றல், வரையும் ஆற்றல், கிரகிக்கும் திறன் ஆகியன புதிய ஆண்டில் கல்வி கற்கவரும்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறியும் நோக்கிலே பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இவை மாணவர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு என்ன மாதிரியான கற்றல் முறை தேவை என்பதை இனம் காண்பதற்கு நடத்தப்படுகின்றது. இதனை அனைவரும் புரிந்து கொள்ளும் வேண்டும் - என்றார். (எ-ரி)

# தாதியர்களின் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு.ஜன.13
கொழும்பு சிறிஜயவர்தனபுர மருத்துவனையில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தாதியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தாதியர்கள் நேற்று தமது போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர்.

சிறிஜயவர்த்தனபுர மருத்துவமனையில் கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் நேர நடைமுறையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தால் மருத்துவமனையின் அன்றாட சேவைகள் பெரியளவில் பாதிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று சமரசப் பேச்சு நடத்தப்பட்டது.

பேச்சில் நீதியான தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் தாதியர்கள் அறிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே கைவிரல் பதிவு முறையை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு நிர்வாகம் இணக்கம் வெளியிட்டதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. (ற-ரி5)



# கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி குடை சாய்ந்தது

கிளிநொச்சி, ஜன.13
பரந்தன் பூநகரி பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி, விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவம் பரந்தன் ஓசியர் கடை சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

தம்புள்ளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மரக்கறி ஏற்றி சென்ற பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகில் உள்ள நீர் வடிகால் கட்டமைப்பில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளானதுடன் பாரவூர்தி பெரும் சேதங்களுக்குள்ளாகியது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற)

# விபத்தில் ஒன்பது பேர் காயம்

தம்புள்ள.ஜன.13
தம்புள்ள கலேவேல திவுல்கஸ்கொடுவ பிரதேசத்தில், நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒன்பது பேர் காயமடைந்தனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்த வான், வீதியை விட்டு விலகிச் சென்று மதிலொன்றில் மோதி விபத்துக்குள்ளானது என பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனைக்கு பயணிகளை ஏற்றிச்சென்ற வானொன்றே விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் கலேவேல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதில் ஆறு பேர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2)



## சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம்

வவுனியா, ஜ.13
சுவாமி விவேகானந்தரின் 155ஆவது பிறந்த தின நிகழ்வு வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தொடருந்து நிலைய வீதிலுள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து. மலர் தூவி கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா ஹற்றன் நஷனல் வங்கியின் பங்களிப்பில் தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ் மணி அகளங்கன் நிகழ்த்தி னார்.

நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் உத்தியோகத்தர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர். தமிழ் விருட்சம் அமைப்பின் உறுப்பினர்கள் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)

# கோத்தா கைதானால் பொங்கியெழுவோம்

## ரோஹித்த அபேகுணவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜன.13
கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கான சூழ்ச்சிக்குப் பின்னால் அவரது குடும்ப அங்கத்தவர்களே இருப்பதாக முதலமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார். ராஜபக்ச குடும்ப அங்கத்தவர்கள் பதவிகள், வரப்பிரசாதங்களுக்கும், நாட்டை விற்பனை செய்கின்ற இலாபங்களுக்காக சகோதரத்துவத்தை பலி கொடுக்கும் குடும்பத்தினர் அல்லர்.



இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்சவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

ராஜபக்ச குடும்ப அங்கத்தவர்கள் சகோதரத்துவத்தை அழித்துக் கொள்கின்ற குடும்பத்தினர் அல்லர். ராஜபக்ச குடும்பம் என்பது சகோதரத்துவத்தை விட்டுக்கொடுக்காத குடும்பமாகும். அதனால்தான் அரச தலைவராக மகிந்த ராஜபக்சவும், பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய ராஜபக்சவும் இணைந்து போரை முடிவுக்குக் கொண்டுவந்தார்கள். அந்தப் பொறுப்புக்களை இருவரும் சரிவர நிறைவேற்றினார்கள். கோத்தபாய ராஜபக்சவை கைது செய்ய முயற்சிக்கிறார் கள். கோத்தபாய ராஜபக்சவை கைது செய்தால் அதற்கெதிராக இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் குரல்கொடுப்பர். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தும் கூட ஒருவராவது குரல் கொடுப்பார்.என்றார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கு அவரது குடும்ப அங்கத்தவர்களே சூழ்ச்சி செய்வதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய அண்மையில் தெரிவித்திருந்தார். அதனால் தென்னிலங்கை அரசியலில் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு.ஜன.13
தலங்கம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இன்னுமொருவர் காயமடைந்துள்ளார்.

35 வயதுடைய ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனம் வாகனமொன்றில் மோதியே விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# மரநடுகைத் திட்டம் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,ஜன.13
கிளிநொச்சி, பூநகரி பள்ளிக்குடா தொட்க்கம் பரந்தன் வரையான பிரதேசத்தில் ஆயிரம் மருது மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த வருடத்தில் மர நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை இராணுவம் பிரதான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக மர நடுகை மூலம் இலங்கையில் சௌபாக்கியமான நாடு என்ற திட்டத்தில் 66ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய மரநாட்டு விழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேச செயலர், இலங்கை மின்சாரசபை, வன விலங்கு திணைக்கள அதிகாரிகள், ஆகியோர் கலந்து கொண்டு இந்த மர நடுகை திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (ற-ரி5)







# பொறுமை எனும் பெருமை



## வாழ்வியலுக்குரிய சிறந்த வழிகாட்டல் கருவி

சி.நற்குணலிங்கம்


பொறுமை என்பது மனிதன் கொண்டுள்ள பண்பட்ட தன்மையின் வெளியை குறித்து நிற்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் நிதானத்தை இழந்திராத நிலைபேற்றின் பொருண்மையைச் சுட்டி நிற்கிறது. அனைவருக்கும் உரித்தான உயரிய பண்பியல் கூறாக, அவசியமான செயலுருபாக திகழ்கிறது. பொறுமை காப்பவன் வெகுளி என நினைத்தால் இறுதியில் ஏமாற்றம் கண்டு துன்பப்படும் நிலைமை ஏற்படும் என்பது நோக்குதற்குரியது.

**வாழ்வியல் படிநிலைகளின் கட்டமைவு**

வாழ்வியல் கோலங்கள் அனைத்தினதும் செயற்போக்கிலும், பொறுமையின் துடிப்போடு சிந்தனைபூர்வமாக எடுக்கப்படாத அவசர முடிவுகளே அதிக பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. குடும்பம், பாடசாலை, வேலைத்தளம், அரசியல் என அனைத்து மட்டங்களிலும் பொறுமையற்ற அவசர முடிவுகளே அதிக பின்னூட்டமற்ற விளைவு களையும், கருத்து மோதல்களையும், பிரச்சினைகளையும் உருவம் பெறச் செய்கின்றன. பொறுமையோடு அமைதியுற தங்கள் வாழ்வியல் படிநிலைகள் குறித்து சிந்திக்காமல் தவறான முடிவுகளை மேற்கொண்டு, உயிர்களை மாய்த்துக்கொள்வோரின் எண்ணிக்கையும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. இங்கு, வாழ்வியல் அனைத்துக்குமான அடிநாதமாக விளங்குவது பொறுமை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாம் எல்லோரும் பொறுமையின் பண்புறு சிறத்தலோடு சிந்தித்து நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தை பயனுறுதியாக்கிக்கொள்ள வேண்டும்.

**உயர்வின் அறிகுறி**

பொறுமை என்பது அனைவரிடத்திலும் இருக்க வேண்டிய பண்பியல்பாக காணப்படுகின்ற போதும் அதனைக் கடைப்பிடிப்பது என்பது இலகுவான காரியமல்ல. பொறுமையின் களிப்புடைய முயற்சியே வெற்றியின் அடிநாதம் என குறிப்பிடுவர் சாதனையாளர்கள். உளி விழுகையில் வலி என நினைக்கும் எந்தப் பாறையும் சிலையாக மாற்றங்



காணப்பதில்லை. வலி பொறுத்த சில பாறைகளே சிலையாக மிளிர்கின்றன. எனவே பொறுமைதான் உயர்வான வெற்றிகளை உருவாக்கவல்லது. பொறுமை எனும் கருவியின் சிறத்தலை தவறவிட்டவர்கள் வெற்றியின் பதக்கங்களுக்கு சொந்தம் கொண்டாடுவதில்லை. பொறுமை தனது பயணக் குறிக்கோளை இழந்துவிடும் போது தோல்வி எமைப் பற்றியதாய் நகர்வுறத் தொடங்குகிறது.

**வள்ளுவர் அறிவுறுத்தும் பொறுமையின் மேன்மை**

வாழ்வியலுக்குரிய சிறந்த வழிகாட்டியாக, வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழி எதுவென, வையகத்தாருக்கு 'பொறை உடைமை' என்ற அதிகாரத்தினூடாக குறட்பாவினை மொழிந்து வள்ளுவப் பெருந்தகை கருத்துரைத்துள்ளார். பொறுமையின் மகத்துவம் பற்றி சிறப்புற எடுத்துக் கூறியுள்ளார். அதாவது, "தன்னை அகழ்பவரையும் தாங்கும் நிலம் போல் தம்மை இகழ்வாரையும் பொறுத்தலே மிகச் சிறந்த பண்பாகும்" என அவர் குறிப்பிடுகிறார். மேலும், அளவுக்கு அதிகமாக செய்த பாவங்களையும், தீங்கையும் எப்போதும் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுத்தவர்களை பொன் போல் பொதிந்து வைப்பர். பொறுத்தார்க்கோ உலகம் அழியும் வரை புகழ் உண்டு என்றும் கூறி பொறுமையின் மேன்மையை திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ள தன்மை அற்புதமானது.

**பொறுமை எனும் செயற்கூறின் அவசியம்**

பொறுமையைக் கையாண்டால் பெருமையடைவீர்கள். கோபம், எரிச்சல் போன்ற தேவையற்ற எண்ணங்கள் தோன்றும் போது, பொறுமையுடன் செயற்பட வேண்டும். கோபப்பட்டு வென்றுவிட்டாய் என்றால் உன் கோபம் பெரிது என்று அர்த்தமல்ல. அதைத் தாங்கிக்கொண்டவர்களின் பொறுமை பெரிது என்றுதான் அர்த்தம். "வெற்றி வந்தால் பணிவு அவசியம் என்பது போல் தோல்வி வந்தால் பொறுமை அவசியம்." என்றார் பாரதியார். கடைசி தீக்குச்சியில் காட்டும் பொறுமையையும், பொறுப்பையும் நாம் மேற்கொள்கின்ற அனைத்துவிடயங்களிலும் கடைபிடித்தால் வாழ்க்கையில் என்றும் மேன்மையே.

> "எமது வாழ்வின் அடித்தளத்தை உறுதித் தன்மையோடு கட்டமைத்துக் கொள்ள பொறுமை எனும் செயற்கூறு மிகவும் அவசியமான தேவைப்பாடாக ஒவ்வொருவருடைய இயல்பாளுமைகளின் உள்ளேயும் வேண்டப்படுகிறது. ஒருவன் எவ்வளவு திறமைகளை கொண்டிருப்பினும் அவன் வாழ்வில் உயர்நிலை பெற வேண்டுமெனில், பொறுமையை தன்னுடன் அரவணைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பயணம் பொறுமையின் வழிகாட்டுதலோடு நன்முறையில் இடம் பெறின் வாழ்வின் இலட்சிய நோக்கம் இறுதியில் நிறைவு பெறும். மனிதர்களின் இயல்பாளுமைகளுள் பொறுமைக்கு எப்போதுமே உயர்ந்த இடம் உண்டு. இதன் பற்றுதலாகவே "பொறுத்தார் பூமி ஆழ்வார்" என எமது முன்னோர்கள் கூறி வைத்தனர் என்பதனை புரிந்து கொள்ள முடிகிறது. உணர்ந்து கொள்வோம்.

**பொறுமை தரும் உயர்வு**

எமக்கு ஏற்படும் துன்பங்களை நாம் சகித்துக்கொள்ளப் பழகவேண்டும். உங்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவை மன உறுதியுடன் பொறுமையையும் உங்களுக்கு வழங்கும். வெறுமையற்ற மனப்பொறுமை மற்றும் சிந்தித்தல் எனும் பணிவிடைகள் ஒரு செயலில் அவசியம் இருக்க வேண்டும். இந்த இரண்டு செயலுறுதிகளும் இல்லையெனின் அது ஒழுங்கற்றுச் சிதறிவிடும். ஹெக்டர் கூறிய "பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வாழ்வில் வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது" என்ற கருத்துநிலை இங்கு நோக்குதற்குரியது. அமெரிக்க அரச அதிபராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் பொறுமையின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு தனது மகளின் வகுப்பாசியருக்கு எழுதிய கடிதத்தில், "சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அன்னை திரேசாவின் வாழ்க்கை எமக்கு பொறுமையின் கருத்துருக்களை போதிக்கின்றது. "பொறுமையுடையவன் எதைச் சாதிக்க வேண்டுமென நினைக்கிறானோ அதைச் சாதிப்பான்." என்கிறார் பெஞ்சமின். "பொறுமை கசப்பானது. ஆனால் அது தரும் கனியோ மிகவும் இனிப்பானது." என்கிறார் தத்துவ மேதை அரிஸ்டோட்டல். தென்னாபிரிக்க அரச தலைவராக விளங்கிய நெல்சன் மண்டேலா மற்றும் அகிம்சாவாதி மகாத்மா காந்தி போன்றோர் வேதனைகள், துயரங்கள், துன்பங்களை அதிகம் சந்தித்தபோதும் இறுதி வரை பொறுமையுடன் போராடி வெற்றி பெற்றவர்கள். அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து மறைந்த பின்பும் உலக மக்களால் போற்றிப் பேசப்படுகின்றனர். புகழ் மாலை அணிவித்து சிறப்பிக்கப்படுகின்றனர். பொறுமையின் சிறப்பு என்பது இதுவே. புரிந்துகொள்ள வேண்டும்.

**பொறுத்தார் பூமி ஆழ்வார்**

ஆக, எமது வாழ்வின் அடித்தளத்தை உறுதித் தன்மையோடு கட்டமைத்துக் கொள்ள பொறுமை எனும் செயற்கூறு மிகவும் அவசியமான தேவைப்பாடாக ஒவ்வொருவருடைய இயல்பாளுமைகளின் உள்ளேயும் வேண்டப்படுகிறது. ஒருவன் எவ்வளவு திறமைகளை கொண்டிருப்பினும் அவன் வாழ்வில் உயர்நிலை பெற வேண்டுமெனில், பொறுமையை தன்னுடன் அரவணைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பயணம் பொறுமையின் வழிகாட்டுதலோடு நன்முறையில் இடம்பெறின் வாழ்வின் இலட்சிய நோக்கம் இறுதியில் நிறைவு பெறும். மனிதர்களின் இயல்பாளுமைகளுள் பொறுமைக்கு எப்போதுமே உயர்ந்த இடம் உண்டு. இதன் பற்றுதலாகவே "பொறுத்தார் பூமி ஆழ்வார்" என எமது முன்னோர்கள் கூறி வைத்தனர் என்பதனை புரிந்து கொள்ள முடிகிறது. உணர்ந்துகொள்வோம்.



# நாடோடிகள் - 2

## மீண்டும் இணைகின்றனர் சமுத்திக்கனி- சசிக்குமார்

சமுத்திரக்கனி இயக்கத்தில் சசிக்குமார், விஜய்வசந்த், அனன்யா, பரணி நடிப்பில் 2009ஆம் ஆண்டில் வெளியான படம் நாடோடிகள். மைக்கேல் ராயப்பன் தயாரித்த இந்தப் படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது. 9 வருடங்களுக்குப் பிறகு 'நாடோடிகள்' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்க சமுத்திரக்கனி முடிவு செய்துள்ளார். நாடோடிகள் – 2 படத்தை அவரே தயாரிக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

நாடோடிகள் 2 படத்திலும் சசிக்குமாரே கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. 'நாடோடிகள்', 'போராளி' ஆகிய படங்களைத் தொடர்ந்து சமுத்திரக்கனியும் சசிக்குமாரும் மீண்டும் இணையும் படம் இது. இந்தப் படத்தின் அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கின்றது.

பிறர்மேல்
சேற்றை வாரி
இறைக்க
நினைத்தால்
அதற்கு முன்பே நீ
அதனை உன்
கையால் தொட்டு
கறைபடுத்திக்
கொள்வாய்
என்பதை நினை
வில் கொள்.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 7 | | 9 |
| | 2 | | | 7 | | | | |
| | 6 | | 3 | 1 | | | | |
| | 3 | | | | | 1 | | 6 |
| | | 4 | 1 | | 8 | 2 | | |
| 8 | | 2 | | | | | 4 | |
| | | | | 8 | 1 | | 9 | |
| | | | | 3 | | | 7 | |
| 1 | | 5 | 9 | | | | | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 7 | 5 | 3 | 4 | 6 | 2 | 9 |
| 5 | 3 | 2 | 9 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 9 | 6 | 4 | 2 | 8 | 7 | 3 | 5 | 1 |
| 3 | 2 | 1 | 6 | 7 | 9 | 5 | 4 | 8 |
| 8 | 9 | 5 | 1 | 4 | 3 | 2 | 7 | 6 |
| 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 | 1 | 3 |
| 4 | 5 | 9 | 3 | 2 | 1 | 8 | 6 | 7 |
| 2 | 7 | 3 | 4 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 6 | 1 | 8 | 7 | 9 | 5 | 4 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதி யில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நான் போடுற செருப்புக் கூட ஜோடியா இருக்கு...



அதைப் போடுற நான் இன்னும் சிங்கிளாவே இருக்கேன்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய அணுகுமுறையைப் பின்பற்றவும். மிதமான வருமானம் இருக்கும்.

**இடபம்:** எதிர்கால வாழ்வு குறித்த நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு இருக்கும். சுபவிஷய பேச்சில் முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம்:** புத்துணர்வுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** திடீர் பொறுப்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் அளவான வருமானம் இருக்கும். தொழிலுக்கான கடன் வாங்க நேரிடலாம். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**சிங்கம்:** நல்லோரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள நிலுவைப் பணிகளை உடனே நிறைவேற்றுவது அவசியம்.

**கன்னி:** எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி எளிதாக நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** வழக்கத்துக்கான மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவு சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

**தனுசு:** பொது விவகாரத்தில் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. கூடுதல் உழைப்பின் மூலம் தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கலாம்.

**மகரம்:** சான்றோர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பிற்கான நற்பயன் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** யாரிடமும் வீண் விவாதம் வேண்டாம். மன அமைதியைப் பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலக்கு நிறைவேற அவகாசம் தேவைப்படும்.

தோல்வி என்பது வெற்றிக்கு முதல்படி...



எனக்கு மட்டும் ஏன் நிறைய படி இருக்கு...



**என் தவறுகளை**
என் முகத்தைப் பார்த்து
என்னிடமே கூறுங்கள்
என்னைச் சுற்றி
உள்ளவர்களிடம் அல்ல...
ஏனென்றால்
என் தவறுகளை நான்தான்
திருத்திக் கொள்ள முடியும்
மற்றவர்கள் அல்ல...

# ருவிற்றர்



witter.com/ajmalnks
பெற்றோர்களுக்கே தெரியாத
பிள்ளைகளின் திறமைகள்
பள்ளிகளில் நடக்கும் போட்டியின்
மூலமே வெளிப்படுகின்றன.



twitter.com/Kozhiyaar
உங்களை அதிகம் ஈர்க்கும்
பொருளில் இருந்து விலகியே
இருங்கள்!!
விரைவில் அடிமையாக அதிக
வாய்ப்பு இருக்கிறது.



twitter.com/VKtwitz_Vicky
கண்களை நம்பு காதுகளை
நம்பாதே ஏனென்றால்
கண்கள் நடப்பதை மெய்பிக்கும்
காதுகளோ நடந்தவற்றை
சித்தரிக்கும்..!!!



twitter.com/SairSairam
எப்போதும் பணம் சேர்க்கும்
ஆசையுடன் வாழும் பணக்காரனை
விட பணம் குறைவாகவே
இருந்தாலும் மன நிம்மதி அடைவது
ஏழை தான்...

# Vacancy office Assistant

Applications are invited to the post of office Assistant from a young active person with devotion to serve the disabled.
The Applicant should be able to maintain cash, Accounts and inventory, office correspondence and correspond in Tamil and English. Basic Computer Literacy is essential.
Applicants should sent their applications in their own Hand writing with testimonials of Experience and qualifications.
An efficient person will have good promotional prospects.
**Salary:- Starts at Rs. 15,000.00 per month** (negotiable based on qualifications and experience)
**Applications close on :- January 24,2018**

Association for Rehabilitation of the Disabled
47/2,Adiyapatham Road, Thirunelvely North, Jaffna.
(CS/12850)(11,17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆனந்தன் கயூரிகா**
திதி :- (13.01.2018)
மண்ணில் 06.08.2009
விண்ணில் 25.12.2016

ஓராண்டு கடந்தாலும் என்றும் எம் இதயத்தில் வாழும் எம் செல்வத்திற்கு எமது அஞ்சலிகள்

என்றும் நினைவில் குடும்பத்தினர். (cs 12848)(12-17) அளவெட்டி கணேஸ்வரம்.

# கண்ணீர் அஞ்சலி



சத்தியசாயி பாடசாலையின் பணிப்பாளர்
**ஸ்ரீ.R.வசந்தசேனன் திருமதி வ.பத்மினி**
தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி
**திருமதி காசிதாசன் காயத்திரி**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்த நாம் ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாயியின் பாதங்களை சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சத்தியசாயி பாடசாலைச் சமூகம்.
(cs12846)(12-17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

**முதுகலைமாணி – சைவ சித்தாந்தம்** 2018/19(அணிVI)
மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்
குறிப்பு:- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் பரிசீலிக்கப்படலாம்
கற்கைநெறிக் காலம்: ஒருவருடம்
மொழி மூலம்: தமிழ்
தெரிவு முறைமை: நேர்முகத்தேர்வு
கற்கைநெறிக் கட்டணம்: 85,000/-
விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1-001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/-பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப் பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் பல்கலைக் கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை / மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்தியபற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.
விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 15.02.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
08.01.2018 (IN 5479) (10)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## பால்விநியோகஸ்தர் தேவை

எமது சங்கம் நாளாந்தம் காலை. மாலை வீடுகளுக்கு பால்விநியோகம் செய்வ தற்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 30.01.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்'** என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி: பால் விநியோகஸ்தர் (ஒப்பந்தம்)**
**சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தகைமைகள்:**
(1) ஐந்தாம் வகுப்பு கல்விச்சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
(2) மோட்டார் சைக்கிள் ஓடக்கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**
1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

11.01.2018 (IN/5505)(11,17) **தலைவர்**

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18.06.1957 உதிர்வு 28.12.2013



அமரர்
**முதலி மார்க்கண்டு**
திதி - அபரபக்கஏகாதசி
(12.01.2018 வெள்ளி)

*நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்*

விடத்தற்பளை வீதி.
உசன் மிருசுவில். (c5572)(8.17)
நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 . 10 . 1932



மறைவு 16 . 12 . 2017


## அமரர் சிவக்கொழுந்து சிவபாக்கியம்
(தாவடி)

எமது குடும்பத்தின் தலைவியாய் வாழ்ந்து வழிகாட்டி எம்மை அரவணைத்து அன்பு காட்டி வாழ்ந்த அன்புத் தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும், நேரில் வந்து பல வழிகளிலும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் நேரில் வந்து பல வழிகளிலும் உதவிய புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.இன்று (13.01.2018) சனிக்கிழமை தாவடியிலுள்ள அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நடைபெறும் .

"சிவபதி"
தாவடி வடக்கு, கொக்குவில். (CS/12857)(16,17)
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**இராசையா தங்கராசா**
(ஓய்வுநிலை இ.போ.ச.சாரதி)



பிறப்பு 23.07.1950
இறப்பு 13.01.2017
திதி: பிரதமை (02.01.2018)

கண்ணயர்ந்த வேளையில் ஓராண்டு
காற்றைப்போல கடந்து போயிருந்தாலும்
ரணமாய் வலிக்கின்றன - உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில்....

(ach 00295)(13.7)

மறவன்புலோ மேற்கு, சாவகச்சேரி.
என்றும் மறவாத மனைவி, மக்கள்.

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111
advt@uthayan.com,

**வாடகைக்கு**
ஊரெழுவில்
அரிசி ஆலை வாடகைக்குண்டு.
077 401 3959 / 077 378 6647

**வாகனம் வாடகைக்கு விடப்படும்**
$10\frac{1}{2}$ அடி நீளமுள்ள
JMC லொறி மூடிய நிலையில் உள்ளது.
**077 844 8797** (CS 12839)(11,17)

**வாடகைக்குத் தேவை**
எமக்கு 1கியூப் (100 க.அடி) அளவுடைய ரிப்பர் / கன்டர் வாகனம் தொடர்ச்சியாக தேவை. கொடுப்பனவு நேரடியாக பேசித் தீர்மானிக்கலாம்.
**077 760 6588**

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில், யாழ்ப்பாணத்தில் இயங்கும் உள்நாட்டு வெளிநாட்டு பார்சல் நிறுவனத்திற்கு Bill Clerk மற்றும் உதவியாள்கள் தேவை.
உணவு, தங்குமிடம் இலவசம்.
071 766 7715

**விற்பனைக்கு**
சாம்சங் (Samsung) J5 போன் (Warranty) உடனும், கண்ணாடி மேசையும் விற்பனைக்குண்டு.
**075 0824 530** (ach124)(12-17)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், பலாலிவீதி, திருநெல்வேலி (Farm School) இற்கு அண்மையாக 5 பரப்பு 13.70 குளி அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.
**077 614 6434**

**வாகனம் வாடகைக்கு விடப்படும்**
$10\frac{1}{2}$ அடி நீளமுள்ள
JMC லொறி மூடிய நிலையில் உள்ளது.
**077 844 8797** (CS 12839)(11,17)

**மணமகன் தேவை**
கனடா PR உள்ள. 1970 இல் பிறந்த அழகிய மெல்லிய பெண்ணுக்கு பொருத்தமான வரன் தேவை. மணமகள் பதிவுத் திருமணம் மட்டும் புரிந்து விவாகரத்துப் பெற்றவர். தரகர் தேவையில்லை.
**075 082 4530** (ACO 128)(11,17)

**வர்த்தக இடம் வாடகைக்கு உண்டு**
கிளிநொச்சி A9 மத்திய இடத்தில் 6550 சதுர அடி கொண்ட வாகன தரிப்பிடம் உட்பட எல்லா வசதிகளுடனும் கூடிய புதிய வர்த்தக / அலுவலகங்களுக்கான கட்டடம் வாடகைக்கு உண்டு.
**தொடர்பு :- 076 744 0456**

## விதிமீறல்...

டும் தமிழ் சம உரிமை இயக்கம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸார் இது தொடர்பில் விசாரணை நடத்தினர். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய குருக்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்று அவருக்கு தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் எடுத்துரைத்தது.

எனினும் பொலிஸார் இந்த விடயத்தில் அரசியல்வாதிகளைக் காப்பாற்றும் நோக்குடன் செயற்பட்டுள்ளனர் என்று நேற்று முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கை வெளியீட்டில் கலந்து கொண்ட அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்காமல், விடயத்தை திசை திருப்பும் வகையில் ஆலயக் குருக்களை மன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்திடம் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தேர்தல்...

துவம் தொடர்பாக வேட்பாளர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பெண்கள் அதிகமாக உள்ளனர். நாடு முழுவதும் நடக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25 வீதமான பெண்கள் உள்ளடங்க வேண்டும் என்ற கோரிக்கை சரியானது. இந்தத் தேர்தல் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவரும். 60 ஆண்டுகளாகச் செய்யப்படாத வேலைகள் இந்தத் தேர்தலில் நடக்கும் என்று நம்புகின்றேன் - என்றார்.

புதிய தேர்தல் சட்டத்தின் படி 60 வீதம் வட்டாரம் ,40வீதம் விகிதாசாரம் என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெறவுள்ளது. வட்டாரங்களில் வெற்றி பெறும்பட்சத்தில் மேலதிகமாக 8 ஆசனங்கள் பிரித்து வழங்கப்படும். ஒரு வட்டாரத்தில் குறைந்தது மூன்று வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும். வாக்குகள் எண்ணும் போது கட்சி சார்பாக நியமிக்கப்படுவர்கள் நல்ல துடிப்பான நபராக இருக்க வேண்டும். வாக்குகள் எண்ணப்படும் போது ஒரு வாக்குகள் முறை இல்லாமல் நிராகரிக்கப்பட்டாலும் அதனை போராடி பெறவேண்டும். உங்களுக்கு எந்த வாக்களிப்பு நிலையத்தில் அதிக வாக்குகள் கிடைக்கும் என்பதை தெரிந்து கொண்டு அந்த வட்டாரத்தில் முறையான பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். தேர்தல் விதிமுறைகள் மீறல் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். 7 வருடங்களுக்கு வேட்பாளரின் குடியுரிமை பறிக்கப்படும். முன்னைய தேர்தலைப் போன்று வாக்குப் பெட்டிகள் நேரம் தாழ்த்தி வேறு இடத்துக்கு கொண்டு சென்று எண்ணப்பட மாட்டாது. பி.ப. 4 மணிக்கு தேர்தல் நிறைவடையும் பி.ப. 4.15 க்கு வாக்குகள் எண்ணப்படும் என்பன போன்ற விடயங்கள் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன. (ற-ரி)

## பதவி...

தில்லை. எந்த நபராகவும் இருக்கலாம். எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். எந்த இனமாகவும், மதமாகவும் இருக்கலாம். அதனைப் பற்றி எனக்குக் கவலையில்லை. யார் தவறிழைக்கின்றார்களோ அவர்களுக்கான தண்டனையை வழங்குவதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு என்றும் நான் தடையாக இருந்ததில்லை. அவ்வாறு என்றும் இருக்கப்போவதுமில்லை. யாரையும்காப்பாற்றவேண்டிய அவசியம் எனக்குக்கிடையாது. ஒரு விடயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். நான் அரச தலைவர் பதவியை ஆசைப்பட்டு இந்தப் பதவிக்கு போட்டியிடவில்லை. அது எனது நோக்கமும் கிடையாது. இந்தப் பதவியை விட்டுக் கொடுக்காது பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது.

என்னுடைய பதவிக்காலம் தொடர்பாக நான் நீதிமன்றத்திடம் கோரிய வியாக்கியானம் சம்பந்தமாக அண்மைய நாள்களாக பல்வேறு கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. எனக்கு முன்னைய அரச தலைவர்கள் இவ்வாறு நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்கள். அவர்களுக்கும் தமது பதவிக்காலம் சம்பந்தமாக பிரச்சினைகள் இருந்தபோது அத்தகைய வியாக்கியானங்களை உயர் நீதிமன்றத்திடத்தில் கோரியிருக்கின்றார்கள். அதற்கான பதிவுகள் உள்ளன.

உயர்நீதிமன்ற, மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆராய்ந்து வழங்கும் எந்தத் தீர்ப்பையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றேன். ஐந்து ஆண்டுகளா அல்லது ஆறு ஆண்டுகளா என்பது எனக்கு ஒரு பிரச்சினை கிடையாது. அரச தலைவர் கதிரையை பாதுகாத்துக்கொண்டு எனது பதவியை தக்கவைப்பது எனது நோக்கமல்ல. என்னுடைய பதவியை இன்று வேண்டுமானாலும் விட்டுவிட்டு மக்களுடன் மக்களாக மக்கள் சக்தியாக அணி திரள்வதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (ற-5,61)

## மாணவர்களின்...

பீட 4 ஆம் மற்றும் 3ஆம் வருட மாணவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலுக்குப் பின்னால் எந்த அரசியல் காரணிகளும் இல்லை. மாணவர்களின் மோதலின் பின்னணியில் அரசியல் காரணங்கள் உண்டு என்று சில தவறான கருத்துக்கள் வெளிவருகின்றன. அவற்றில் எந்த உண்மையும் இல்லை. தேர்தல் காலம் என்பதனால் வேறு பிரச்சினையாக மாணவர்களின் மோதல் சம்பவத்தைத் திசை திருப்பச் சிலர் முயற்சி செய்கின்றனர்.

மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே மோதலுக்குக் காரணம். தற்போது மோதல் தொடர்பில் பல்கலைக் கழக நிர்வாகம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. தவறிழைத்த மாணவர்களுக்கு எதிராக விசாரணைகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

இராமநாதன் நுண்கலைப்பீடம், சட்டத்துறை மற்றும் 1ஆம், 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன. - என்று அவர் தெரிவித்தார். (ற-4,37)


ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.01.2018 | வெற்றி வாரம் 2236 | வர்ணம் சிவப்பு
கடகம் | வெற்றி இலக்கங்கள் 17 45 46 50 | ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 7,559,168/=
2018.01.14 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# 2018 ஆம் ஆண்டுக்கான பகிரங்க ஏல அறிவித்தல்

01. இடம் :- நகராட்சிமன்ற அலுவலகம்
02. காலம் :- 23.01.2018 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி
03. குத்தகைக் காலம் :- 24.01.2018 தொடக்கம் 31.12.2018

**2018 ஆம் ஆண்டு கருவாடு மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகைவிவரம் | ஆகக்குறைந்தஏலத் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை- இல-02 | 1,572,000.00 | 15,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை- இல-01 | 530,000.00 | 5,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை - இல. 02 | 530,000.00 | 5,000.00 |
| 04. | கோழி இறைச்சிக்கடை - இல -02 | 1,342,000.00 | 13,000.00 |
| 05. | கருவாட்டுக் கடை - இல 01 | 74,250.00 | 7,000.00 |
| 06. | கருவாட்டுக் கடை - இல 02 | 74,250.00 | 7,000.00 |

**குறிப்பு:-** பகிரங்க ஏலத்தில் பங்குபெறுபவர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையினை 23.01.2018 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சபையில் செலுத்துதல் வேண்டும். பகிரங்க ஏலத்தில் சித்திபெறுபவர் கேள்வித்தொகையின் 2/3பகுதியை ( வரிகள் உட்பட ) உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும். கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது. இந் நகராட்சி மன்றத்தின் கடைகளிலிருந்து 1KM சுற்றுவட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி மற்றும் கருவாடு விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

**நகராட்சிமன்றம், சாவகச்சேரி. 12.01.2018** (in.5504) (13.17)

**திரு.கா.சண்முகதாசன், செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**


கடை வாடகைக்குண்டு
வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில் கடை வாடகைக்குண்டு
077 968 7677

சீட்டிழுப்பு வாரம்: 634 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.12
வெற்றி இலக்கங்கள் 05 13 19 50 Q
ரூ. 11,500,268/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 240
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.12
ரூ. 81,378,692/-
J 02 50 56 64
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 135
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.12
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,411,695/-
வெற்றி இலக்கங்கள் 01 16 36 58 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## சிவபூசா துரந்தரர்
# வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

சிவனாய் 17 . 02 . 1920



சிவமாய் 01 . 01 . 2011

**திதி :- அபரபக்க துவாதசி சனிக்கிழமை (13.01.2018)**

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை - என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

(பெரியபுராணம்)

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

(திருக்குறள்)

**24, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** (cs 12832)(12-17) **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்
# மகாலிங்கம் உதயராணி



தோற்றம் 14.02.1968 மறைவு 11.01.2018

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் 53/3, முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் 113, பெரியகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் உதயராணி கடந்த (11.01.2018) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியகுளம், கண்டாவளை. 077 020 6398** (K 494/15) **தகவல்: குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 . 02 . 1945



ஆண்டவன் அடியில் 25 . 12 . 2016

## அமரர் சின்னத்தங்கம் புலேந்திரலிங்கம்

திதி:- அபரபக்க துவாதசி (13.01.2018)

எம் குடும்பத்தின் குல விளக்கே!
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எமைப் பிரிந்து
ஓராண்டு சென்றதுவோ!
மெய்வருத்தம் பாராது என்றும்
இன்முகத்துடனே வலம் வந்தீர்
எம் குடும்பத் தேரினையே
இலாவகமாய் இழுத்து வந்து
நட்டுநடு வீதியிலே பரிதவிக்கவிட்டு
பிரிந்து சென்ற எம் தெய்வமே!



**எம் தாயின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.**

**குடும்பத்தினர்.**
முதலாம் மைல் வீதி, இல.02, மடத்தடி,
சாவகச்சேரி.

(CS/12834)(11,17)




# யாழ் இந்துவின் பொங்கல் திருவிழா 2018

**14.01.2018** காலை 11.30

**கலாசார நடை பவனி**

சிலம்பாட்டம் ஒயிலாட்டம்

பொம்மலாட்டம் கோலாட்டம்

மாட்டு வண்டி பேரணி

**தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள்**

கபடி கிளித்தட்டு

**தமிழர் திருநாளினை எமது கலாசார பாரம்பரியங்களுடன்
இணைந்து கொண்டாடி மகிழ அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம் !!**

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள்


## மரண அறிவித்தல்

# திருமதி சரஸ்வதி சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற K.B.S. விவசாயத் திணைக்களம்)**



வளலாயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுந்தரலிங்கம் நேற்று (12.01.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தாவரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற நிலையப் பரிசோதகர் CTB) அவர்களின் அன்பு மனைவியும் லிங் கேஸ்வரி (லண்டன்), சத்தியேந்திரன் (பெரும்பாக அலுவலர் - நல்லூர்), சத்தியசிறி (கனடா), இராசநிதி (ஆசிரியை - யா / சன் மார்க்க மகா வித்தியாலயம்), சதாசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ண மூர்த்தி (லண்டன்), அருந்தவமாலா (யா/இராமநாதன்கல்லூரி), ஆனந்தி(கனடா), லோகேஸ்வரன்(அதிபர், யா/நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), நிஷாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பாக்கியம், ஆச்சிமுத்து மற்றும் இராசமணி (நீராவியடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசமணி, பவளராணி, விஜயலட்சுமி, இராசலிங்கம் மற்றும் கமலாதேவி (சிங்கப்பூர்), சறோஜினி, தர்மலிங்கம் (JP, முன்னாள் உபதவிசாளர் - வலி. கிழக்கு பிரதேசசபை) ஆகியோரின் மைத்துனியும் வைத்திய கலாநிதி தீபா (கேம்பிறிஜ் பல்கலைக்கழகம், லண்டன்), காயத்திரி (B.Sc லண்டன், காலநிலை எதிர்வுகூறல் கணிப்பாளர்), பானுஷா (முதலாம் வருட மாணவி, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), யாழரசன் (மாணவன் - யா /யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஆதீஸ் (ஜோர்ஜ் பல்கலைக்கழகம், கனடா), ஆதினி (பல்கலைக்கழகம் கனடா), தர்ஷிகன் (3 ஆம் வருட மாணவன் SLIIT), தர்ஷிகா (மருத்துவபீட புகுமுக மாணவி), தினேசன் (பல்கலைக்கழக புகுமுக மாணவன்), தமிதா (கனடா), கம்சா (கனடா), சயானா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.01.2018) திங்கட்கிழமை மு.ப. 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சு. சத்தியேந்திரன் (ADO மகன்)
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. 021 223 0510**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 12856/15/17)


## பதவி வெற்றிடம்

ZOA RELIEF | HOPE | RECOVERY

சோஆ நிறுவனம் இலங்கையில் கடந்த 22 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருவதோடு சமீப காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்டகால நிலையான சமூகப் பொருளாதார அபிவிருத்தி பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்களுடனும் தமது மனிதாபிமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சோஆ நிறுவனம் இலங்கையில் வடமாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்ற செயத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு கீழ்காணும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியாக ஆண் / பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. திட்ட உத்தியோகத்தர் / திட்ட உதவியாளர் – முல்லைத்தீவு மாவட்டம்.**
இப்பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பகுதியில் சமூக மேம்பாடு தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டப்படுவர். சிறப்பாக தொழிலாளர் உரிமைகள், பெண்தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகள், பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான செயற்பாடுகள் குறிப்பாக சிறுகுழு முயற்சிகளில் ஈடுபடுதல் உள்ளடங்களாக சமூக மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அறிவையும் அனுபவத்தையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**2. திட்ட உத்தியோகத்தர் / திட்ட உதவியாளர் – கிளிநொச்சி மாவட்டம்.**
இப்பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகப் பகுதியில், சமூக மேம்பாடு தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டப்படுவர். சிறப்பாக இப்பகுதியில் வசிக்கும் மீனவ சமுதாயத்துடன் பணிபுரியக்கூடிய, அவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய அறிவையும் அனுபவத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிப்பவர்கள் இரு சக்கர மோட்டார் வாகனம் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் தேவையேற்படின் இப்பகுதிகளில் அமைந்துள்ள சோஆ அலுவலகங்களில் தங்கியிருந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்களாகவும் இருத்தல் அவசியம்.

தகுதியானவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையினை சோஆ நிறுவனத்திற்கு தை மாதம் 23ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் மின்னஞ்சல் ஊடாகவோ (colombo@zoasrilanka.org ) அல்லது தபால் மூலமாகவும் ( ZOA, No. 6/1, Alexandra road, Colombo -06) அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் பகுதி நேரம் வேலை செய்ய விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
மேற்படி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும் தகுதியானவர்களுள் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களில் இருந்து விண்ணப்பிக்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



# 2018 புத்தாண்டு பலன்கள்

2017 முடிந்து 2018 பிறந்துள்ளது. இந்தாண்டு ஒவ்வொரு ராசிக்காரர்களுக்குமான பலன்கள் பற்றியும் பரிகாரத் தலங்கள் பற்றியும் விரிவாகப் பார்ப்போம்.



## கும்பம்

உயர்ந்த லட்சியங்களைக் கொண்டவர்களே! உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டுக்கு உரிய சூரியன், இலாப வீட்டில் வலுவாக இருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால், ஆளுமைத் திறன், நிர்வாகத் திறமை அதிகரிக்கும். சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். வாஸ்துப்படி வீட்டை மாற்றி அழகுபடுத்துவீர்கள். பதவிகள் தேடி வரும். வாழ்க்கைத்துணை வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டாகும்.

**பார்வைப் பலன்கள்**

புத்தாண்டின் தொடக்கம் முதல் 2.10.18 வரை குரு பகவான் 9ஆம் வீட்டில் வலுவாக இருப்பதால், முடியாத வேலைகளையும் சுலபமாக முடித்துக் காட்டுவீர்கள். தொழிலதிபர்கள், உயர் பதவிகளில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். தினமும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளின் திறமைகளைக் கண்டறிந்து வளர்ப்பீர்கள். பிதுர்வழிச் சொத்து கைக்கு வரும். தந்தையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆனால், 14.2.18 முதல் 10.4.18 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும் மற்றும் 3.10.18 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 10ஆம் வீட்டில் அமர்வதால், சிறுசிறு அவமானம், ஏமாற்றம் வந்து நீங்கும். பழைய பிரச்னைகள், சிக்கல்கள் மீண்டும் வந்துவிடுமோ என்றெல்லாம் அச்சப்படுவீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். சில நேரங்களில் தர்மசங்கடமான சூழ்நிலைகளில் சிக்குவீர்கள்.

ஆண்டு முழுவதும் சனிபகவான் இலாப வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால், தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்பும் அதனால் ஆதாயமும் கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் வார்த்தைக்கு மதிப்புத் தருவார்கள். சிலர் வாஸ்துப்படி வீட்டை மாற்றி அழகுபடுத்துவீர்கள். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். அடகில் இருந்த நகை மற்றும் வீட்டுப் பத்திரங்களை மீட்பீர்கள். மகளின் திருமணத்தை விமர்சையாக நடத்துவீர்கள். மகனுக்கு வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பொது விழாக்களில் மதிப்புறுத்தப்படுவீர்கள். வீடு அல்லது மனை வாங்க வேண்டும் என்ற ஆசை இப்போது நிறைவேறும். தள்ளிப் போன வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

1.1.18 முதல் 13.1.18 வரை சூரியன் சனியுடன் சேர்வதால் இக்காலக்கட்டத்தில் போராட்டங் களைச் சமாளிக்கும் பக்குவம் கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. பூர்விகச் சொத்தால் வருமானம் வரும்.

10.3.18 முதல் 2.5.18 வரை செவ்வாய் சனியுடன் சம்பந்தப்பட்டு பலவீனமடைவதால் சின்னச் சின்ன காரியங்கள் கூட தடைப்பட்டு முடிவடையும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் டென்ஷன் அதிகரிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும். மற்றவர்களுக்கு பிணை வழங்க வேண்டாம். சொத்து வாங்கும்போது தாய்ப்பத்திரத்தை சரி பார்த்து வாங்குவது நல்லது.

2.5.18 முதல் 30.10.18 வரை ராசிநாதன் செவ்வாய், கேதுவுடன் இணைவதால் சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியாமல் போகும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம். சகோதர வகையில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

11.6.18 முதல் 4.7.18 வரை சுக்கிரன் 6இல் மறைவதால், வாகனப் பழுது ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்குள் ஈகோ பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது.

புத்தாண்டு தொடக்கம் முதல் வருடம் முடியும்வரை ராகு 6இல் தொடர்வதால், மறைமுக எதிரிகளால் ஆதாயம் அடைவீர்கள். அதிக வட்டிக் கடனில் ஒரு பகுதியைத் தந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட திருமணம் கூடி வரும். பொது நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். பங்குப் பரிவர்த்தனை மூலம் பணம் வரும். வெளிநாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டாகும். அடுத்தடுத்த சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பால்ய நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். புதுப் பதவிகள் தேடி வரும். கேது 12இல் இருப்பதால், நீண்ட நாள்களாகப் போக நினைத்த குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக்கடனை செலுத்துவீர்கள். திடீர்ப் பயணங்களும் அலைச்சல்களும் இருக்கத்தான் செய்யும்.

**வியாபாரிகளுக்கு:** விற்பனை அதிகரிக்கும். இரட்டிப்பு இலாபம் கிடைக்கும். அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். சந்தை நிலவரத்தை அறிந்து முதலீடு செய்து வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பீர்கள். வேலையாள்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு:** தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். சவாலான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். முக்கிய பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைப்பார்கள்.

**மாணவவர்களுக்கு:** பொது அறிவை வளர்த்துக் கொள்வீர்கள். தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி அமையும். நினைவாற்றல் அதிகரிக்கும். கட்டுரை, கவிதைப் போட்டிகளில் கலந்துக்கொண்டு பரிசு, பாராட்டைப் பெறுவீர்கள்.

**கலைத்துறையினருக்கு:** அயராத உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். மூத்த கலைஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள்.

இந்தப் புத்தாண்டு உங்களை விஸ்வரூபமெடுக்க வைப்பதுடன், திடீர் யோகங்களையும், வெற்றியையும் அள்ளித் தருவதாக அமையும்.



## வரலாற்றில் இன்றைய தினம் 13.01.2018

2001 - எல்சல்டோரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார் 800 பேர் உயிரிழந்தனர்.



1840 - வொஷிங்டன் நீராவிக் கப்பல் தீப்பிடித்து விபத்துக்கு உள்ளானதில் 139 பேர் உயிரிழந்தனர்.

1908 - பென்சில்வேனியாவில் ஏற்பட்ட தீ விபத்தில் 171 பேர் உயிரிழந்தனர்.

1964 இந்தியாவின் கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கு எதிராக வெடித்த கலவரத்தில் 100 பேர் உயிரிழந்தனர்.

1982 - வொஷிங்டனில் ஏயார் புளோரிடா வானூர்தி விபத்துக்கு உள்ளானதில் 100 பேர் உயிரிழந்தனர்.

1985 - எத்தியோப்பியாவில் ரயிலொன்று தண்டவாளத்தை விட்டுவிலகி ஆற்றில் பாய்ந்ததில் 428 பேர் உயிரிழந்தனர்.

2008 - நல்லிணக்கத்தில் இலங்கை அரசுக்கு ஆர்வம் இல்லை என்று பிரிட்டன் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு.

## நாளை

**14.01.2018**

ஞாயிற்றுக்கிழமை

**தை-01**

திதி: திரயோதசி பி.இ. 04.10 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப. 03.17 வரை
சுபநேரம்: 09.34–11.04 வரை
ராகுகாலம்: 05.04–06.34 வரை

**தைப்பொங்கல்**

## பத்தி எழுத்து

# வீதி விபத்துக்களை குறைப்பதற்கு வழிதான் என்ன?

கொக்காவிலில் சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றுடன் வேகமாக வந்த வானொன்று கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் நால்வர் உடல் நசிந்து அதேயிடத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்களில் இருவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எமது நாட்டைப் பொறுத்தவரை வீதி விபத்துக்களால் தினமும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. வாகன சாரதிகளின் கவனயீனமே பெரும்பாலான விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. இந்தச் சிறிய நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அளவுக்கும் அதிகமாக உள்ளதா எனவும் எண்ணத் தோன்றுகின்றது. இங்குள்ள வீதிகளைக் கவனத்தில் கொள்ளாது வாகனங்களை அதிக எண்ணிக்கையில் இறக்குமதி செய்வது அவற்றின் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்திவிட்டது.

பொதுமக்கள் மட்டுமல்ல வாகன சாரதிகள் கூட வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை. வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பொலிஸார் அக்கறையுடன் செயற்பட வேண்டும். வீதி விதிமுறைகளை மீறுவோருக்கு அதிக பட்சத் தண்டனையை வழங்குவதன் மூலமாகவும் மக்களிடையே பொறுப்புணர்வை அதிகரிக்க முடியும்.

வெளிநாடுகளைப் போன்று இங்கு பனிப்பொழிவு இருப்பதில்லை. வீதிகள் பனிமூட்டத்தினால் சூழப்பட்டுக் காணப்படுவதில்லை.

அங்கு வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு இவையே முக்கிய காரணங்களாக உள்ளன. ஆனால் வேறு பல காரணங்களால் எமது நாட்டில் வீதி விபத்துக்கள் நிகழ்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக உலகில் அன்றாடம் நிகழ்பவற்றை உடனுக்குடன் அறிய முடிகின்றது. இந்த வகையில் வீதி விபத்துக்களையும் தாமதமின்றி மக்கள் தெரிந்து கொள்கின்றனர். உருக்குலைந்த நிலையில் மனித உடல்கள் கிடப்பதைப் பார்க்கும்போது வேதனைப்படாதவர்கள் எவருமே இருக்க முடியாது. தமக்குத் தாமே அழிவை ஏற்படுத்திக் கொள்கின்ற மனிதர்கள் மற்றவர்களுக்கு வேதனையைப் பரிசாகக் கொடுத்துவிட்டுச் செல்கின்றனர். மனிதர்கள் வசதியாகப் பயணிப்பதற்காக உருவாக்கப்பட்ட வாகனங்கள் அவர்களுக்கு எமனாக மாறுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. வாகனங்களை பிறர் மீது மோதவிட்டு அவர்களது உயிரிழப்புக்குக் காரணமானவர்களை எந்த வகையிலும் மன்னிக்க முடியாது. இத்தகையவர்களுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கியே தீர வேண்டும். இதற்கேற்ப நீதித்துறையில் மாற்றங்களும் வேண்டும்.



## கஞ்சாவுடன் யாழில் பெண் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 20 கிராம் கஞ்சாவுடன் பெண் ஒருவர் நேற்று மாலை 5.30 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளதாக, கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கெற்பேலிப் பகுதியில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது மேற்படி பெண்ணின் வீட்டில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தாகவும், சந்தேகத்தில் கஞ்சாவை வைத்திருந்த 36 வயதான பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (5)

# சபையில் இரட்டை வேடம்

### ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 13

ஐக்கிய தேசியக் கட்சியும், கூட்டு எதிரணியும் முன்கூட்டியே திட்டமிட்ட அடிப்படையிலேயே நாடாளுமன்றத்தில் மோதலில் ஈடுபட்டுள்ளன, என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 10ஆம் திகதி ஏற்பட்ட கூச்சல், குழப்பம், மோதல் நிலமைக்கான காரணம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியதாவது:

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கையும், மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பான 34 அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தன.

பிணைமுறி மோசடி குறித்து பேசினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிக்கல் ஏற்படும். ஏனைய அறிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிட்டால் அது மகிந்த அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்திவிடும். அது மக்கள் விடுதலை முன்னணிக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்பதாலேயே முன்கூட்டியே திட்டமிட்ட அடிப்படையில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அடிதடிக்காகவா நாடாளுமன்றம் அவசரமாகக் கூட்டப்படவேண்டும். ஒரு நாள் அமர்வுக்காக சுமார் 50 லட்சம் ரூபா வரை செலவாகின்றது. இந்த இரு தரப்பும் இணைந்து அந்த 50 லட்சத்தையும் சூறையாடியுள்ளன. இருதரப்பிலும் குற்றவாளிகள் இருக்கின்றனர். அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதற்காக நாம் போராடுவோம் - என்றார். (5)



## அலிபாபாவையும் 40 திருடர்களையும் சிறைபிடிக்கும் வரை ஓயமாட்டோம்

### கூட்டு எதிரணி சபதம்

கொழும்பு, ஜன. 13

பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் சிறையிலடைக்கும்வரை கூட்டு எதிரணியின் போராட்டம் ஓயாது, என்று தூய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில சூளுரைத்துள்ளார்.

கடவத்த பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடி விசாரணைப் பொறிக்குள் ரவி கருணாநாயக்கவையும், அர்ஜுன மகேந்திரனையும் மாத்திரம் பலிக்கடாக்களாக்கிவிட்டு ஏனைய உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கின்றது.

பிணைமுறியுடன் தொடர்புடைய அலிபாபாவையும் 40 திருடர்களையும் (ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள்) சிறையிலடைக்கும்வரை பிணைமுறிக்கு எதிரான போராட்டத்திலிருந்து நாம் பின்வாங்கப்போவதில்லை.

தன் மீதான குற்றச்சாட்டுகள் போலியானதென ரவி கருணாநாயக்க கூறுவது நகைப்புக்குரிய விடயமாகும். இன்று தன்மானமுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களால் வீதியில் நடமாடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை இன்று சிறுபிள்ளைகள் கண்டதும், அம்மா திருடன், அம்மா திருடன் என்று கூச்சலிடுகின்றனர். ஓடிவந்து அம்மாவும் கொடியில் தொங்கும் ஆடைகளை மறைத்துவைக்கின்றாள். காரணம் அதுவும் கொள்ளையடிக்கப்பட்டுவிடும் என்ற பயத்தில் - என்றார். (5)

ரணிலின் உரையைக் குழப்ப கூட்டுச்சதி:

## மகிந்த அணியோடு சு.க. இரகசியப் பேச்சு

கொழும்பு, ஜன. 13

பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் ஆற்றிய உரையைக் குழப்புவதற்குரிய திட்டத்தை மகிந்த அணியான கூட்டு எதிரணியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்தே வகுத்துள்ளன. இது தொடர்பில் இருதரப்புக்குமிடையே இரகசிய சந்திப்பு நடந்துள்ளது என்றும் தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது என்று அறியமுடிகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையின் பிரகாரம் சிறப்பு நாடாளுமன்ற அமர்வை கடந்த 10ஆம் திகதி சபாநாயகர் கூட்டினார். இதன்போது பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை குறித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறப்பு அறிவிப்பொன்றை விடுப்பதற்குத் தயாரானார்.

அவ்வேளையில் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் எதிர்ப்புக் கோசம் எழுப்பியதால், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும், அவர்களுக்குமிடையே கடும் சொற்போர் மூண்டு இறுதியில் கைகலப்பு வரை சென்றது. பின்னர் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே தலைமை அமைச்சர் உரையாற்றினார்.

தலைமை அமைச்சரின் இந்த உரையை நிகழ்த்தவிடாது நாடாளுமன்றத்தில் களேபரத்தை ஏற்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், கூட்டு எதிரணியினரும் சேர்ந்தே திட்டமிட்டுள்ளனர் என்று தலைமை அமைச்சர் அலுவலகத்துக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அறியமுடிகின்றது. (5)

## மைத்திரியின் விளக்கத்தால் கூட்டாட்சிக்குள் குழப்பம்!

### ஐ.தே.க. கடும் சீற்றம்

கொழும்பு, ஜன. 13

கூட்டு அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக் கட்சிகளுடன் எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளாமலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றில் விளக்கம் கோரியுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை பதவிக்கு அமர்த்திய கட்சிகளுடன் அவர் எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது இவ்வாறு செயற்பட்டுள்ளதால் பங்காளிக் கட்சிகள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 2020ஆம் ஆண்டுவரையா அல்லது 2021ஆம் ஆண்டுவரையா பதவியில் இருக்கமுடியும் என்று உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார்.

2021ஆம் ஆண்டுவரை அரச தலைவர் பதிவியில் இருக்க முடியும் என்று சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இந்த நிலையில், இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல,

கூட்டு அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக் கட்சிகளுடன் எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவரது பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றில் விளக்கம் கோரியுள்ளார். நல்லாட்சியை ஏற்படுத்திய கட்சிகளுடன் எவ்வித கலந்துரையாடலையும் அவர் மேற்கொள்ளாது இவ்வாறு நடந்துகொண்டுள்ளதால் அரசின் பங்காளிக் கட்சிகளும் கடும் அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன - என்றார். (5)

## தடைசெய்யப்பட்ட வலைகள் நந்திக்கடல் ஏரியில் பறிமுதல்

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் ஏரியில் நேற்றுமுன்தினம் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட வலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரும், மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து நடத்திய சோதனையின் போதே வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொக்குளாய், நாயாறு, நந்திக்கடல், சாலை கடல்நீர் ஏரியில் சுமார் ஆறாயிரத்துக்கும் அதிகமான கடல்தொழிலாளர்கள் சிறுகடல் தொழிலை மேற்கொண்டு வருகின்றார்கள்

இக்கடல் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்படுவதாக கடல்தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துவந்தனர். இதனையடுத்து நேற்றுமுன்தினம் இரவு அதிகாரிகளும் புதுக்குடியிருப்பு பொலிஸாரும் இணைந்து சோதனை நடத்தினர்.

இதன்போது தடைசெய்யப்பட்ட படுப்பு வலை, தங்கூசி வலை மற்றும் கூட்டு வலைகளைப் பறிமுதல் செய்தனர்.

இந்த வலைகள் அனைத்தும் மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என நீரியல்வளத் திணைக்கள அதிகாரி கலிஸ்ரன் தெரிவித்தார். (ய-ரி3)

### புரட்சிப் பாடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பரப்புரை நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கத்தின் புரட்சிப் பாடல் ஒலிக்கவிடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ற-32)

### 3 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதி சுமார் 3 கோடியே 56 இலட்சம் ரூபாவுக்கு அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காயக்குழி கிராமத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

"கடற்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. கடற்படையினர், சிலாபத்துறை பொலிஸ் அதிகாரிகள், மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இணைந்து தேடுதல் நடத்தினர். பொதி செய்யப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது. வேறு இடத்துக்கு அதைக் கொண்டு செல்ல ஆயத்தப்படுத்திய நிலையில் காணப்பட்டது. அவை தற்போது சிலாபத்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன." என்று மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,56)

### சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒலிக்க விடப்பட்டிருந்தது. இது தொடர்பில் தனது கீச்சகத்தில் நாமல் ராஜபக்ச பதிவிட்டுள்ளார்.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் நிகழ்வில் தமிழீழப் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இதனூடாக தனி நாட்டை - தமிழீழத்தை அங்கீகரித்துள்ளனரா?' என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-5,31)

### டிப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றன்பின் ஒன்றாக டிப்பர்கள் பயணித்த போது முன்பாகப் பயணித்த டிப்பர் சடுதியாக நிறுத்தப்பட்டதால் பின்புறம் வந்த டிப்பர் அதன்மேல் மோதியது என்று கூறப்படுகின்றது. பின்புறம் பயணித்த டிப்பரின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# கரீத் பேல் மீது சிடேன் நம்பிக்கை

ரியல் மட்ரிட் அணியின் முன்னணி வீரரான பேல் மீது பயிற்சியாளர் சிடேன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக காயத்தால் அவதிப்பட்டுவந்தார் பேல். இதனால் பேலை அணியில் இருந்து விடுவிக்கவும் ரியல் மட்ரிட் திட்டமிட்டது. காயத்தில் இருந்து மீண்டு களந்திரும்பிய பின்னர் கடந்த சில ஆட்டங்களில் பேல் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இதையடுத்தே அவர் மீது நம்பிக்கை தெரிவித்தார் சிடேன்.

"பேல் சிறந்த வீரர். அவரைப் பொறுத்த வரையில் இருக்கும் பெரிய பிரச்சினை உடற்தகுதி இன்மையால் அவதிப்படுவதே. அவர் உடல்தகுதியை சிறப்பாக தக்கவைத்தால், மேம்படுத்தினால் அவர் அணிக்கு இன்றிய மைதானவராகத் திகழ்வார்" என்று சிடேன் மேலும் தெரிவித்தார்.

(ம)




# இலங்கை அணி மீது தொடர்கிறது விசாரணை

இலங்கை அணிக்கு எதிரான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான தொடர் கடந்த வருடம் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்றது. ஒருநாள் தொடரில் இலங்கை அணி படுதோல்வியடைந்தது. இதையடுத்து குறித்த தொடரில் ஆட்டநிர்ணயச் சூதாட்டம் இடம்பெற்றது என்று இலங்கை அணியின் முன்னாள் வீரரொருவர் குற்றம் சாட்டியிருந்தார். அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை கிரிக்கெட் சபையின் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஆஸ்லே டி சில்வா, வழங்கிய செவ்வியில் 'பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. ஊழல் இடம்பெற்றமைக்கான எந்த ஆதாரங்களும் வழங்கப்படவில்லை" என்று குறிப்பிட்டிருந்தார். இதை பன்னாட்டு கிரிக்கெட் சபை மறுத்துள்ளது. குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் இலங்கை அணி மீது விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம)





# தெ.ஆபிரிக்க அணியை சமாளிக்குமா இந்தியா?

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்று களமிறங்குகிறது இந்திய அணி. இன்றைய ஆட்டம் நடக்கும் செஞ்சூரியன் மைதானம் தென்னாபிரிக்காவுக்குச் சாதகமானது என்பதால் இந்த ஆட்டத்தில் இந்திய அணி தாக்குப்பிடிக்குமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் அல்லது குறைந்த பட்சம் சமநிலையில் முடித்தால் மட்டமே இந்திய அணியால் தொடரில் தனது இருப்பைத் தக்க வைக்க இயலும்.

இன்றைய ஆட்டம் நடைபெறும் செஞ்சூரியன் ஆடுகளம் தென்னாபிரிக்காவைப் பொறுத்தமட்டில் மிகவும் ராசியான மைதானமாகப் பார்க்கப்படுகிறது. இந்த மைதானத்தில் இதுவரை 22 ஆட்டங்களை தென்னாபிரிக்க அணி எதிர்கொண்டுள்ளது. அவற்றில் 17 ஆட்டங்களில் அந்த அணி வெற்றிபெற்றுள்ளது. மூன்று ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன. இரண்டு ஆட்டங்களில் மட்டுமே தென்னாபிரிக்க அணி தோல்வியடைந்தது. இதனால் இன்று ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணிக்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகவே பார்க்கப்படுகிறது.

செஞ்சூரியன் ஆடுகள பராமரிப்பாளர் பிரையன் பிளாய், "சிறந்த ஆடுகளமாக இருக்கும் வகையில் இதைத் தயார் செய்து வருகிறோம். பந்துவீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும் சம அளவில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதே எங்களது இலக்கு. தொடக்கத்தில் பந்துவீச்சாளர்களுக்கு ஒத்துழைக்கும். அதன் பிறகு துடுப்பாட்ட வீரர்களுக்குக் கைகொடுக்கும். பவுன்சும், வேகமும் நிச்சயம் இருக்கும்' என்று தெரிவித்தார்.

மொத்தத்தில், இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா கோலோச்சுவதை இந்திய அணியினர் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால் அதற்கு ஒரு போரை நடத்த வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இரு அணி வீரர்களும் நேற்றுத் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். (ம)

# ஆஸித் தொடரில் நடால் முதலிடம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடருக்கான தரப்படுத்தலில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்ன் வீரர் நடால் முதலிடம் பிடித்துள்ளார்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. நடால் முதலிடம் பிடித்துள்ளார். பெடரர் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

கடந்த வருடம் பிரெஞ்சுக் கிண்ணம் உள்ளிட்ட பல மகுடங்களை நடால் தனதாக்கியிருந்தார். இதனால் தரப்படுத்தலில் அவருக்கு முதலிடம் கிடைத்தது. கடந்த வருடத்தை முதல்தர வீரராகவே அவர் நிறைவுசெய்தார். இதையடுத்தே நடாலுக்கு ஆஸ்திரேலியத் தொடருக்கான தரப்படுத்தலில் முதலிடம் கிடைத்தது. (ம)



# மன்செஸ்டர் சிற்றி அசத்தலான வெற்றி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றியை எதிர்த்து பிறிஸ்டல் சிற்றி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்குத் தகுதிபெறுவதை கிட்டத்தட்ட உறுதிப்படுத்தியுள்ளது மன்செஸ்டர் சிற்றி. (ம)

EASY ENGLISH WAY
ENGLISH WAY
FRENCH LANGUAGE
பிரான்ஸ், கனடா செல்வோரிற்கானது
திருமணமாகி U.K செல்வோரிற்கான
IELTS LIFE SKILLS
(A1, B1)
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
BASIC ENGLISH
தொடர்புகளுக்கு 077 977 3050, 071 034 4064
44 பலாலி வீதி, யாழ்ப்பாணம்



# மெஸ்ஸியின் அதிரடியால் பார்சிலோனா அபார வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. அடுத்த இரண்டு நிமிடத்தில் அவர் பார்சிலோனாவின் இரண்டாவது கோலையும் பதிவுசெய்தார். ஜோர்டி 28ஆவது நிமிடத்திலும், சுவாரஸ் 31ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் பார்சிலோனாவின் ஆதிக்கம் தொடர்ந்தது. ராகிடிக் 87ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா.

(ம)

Study Engineering Abroad
Civil | Mechanical | Software | Electrical
FULL SCHOLARSHIPS AVAILABLE
Conditions Apply



# Fully English Medium
# IELTS Not Required
# Low Course fee
# Low Living cost
#100% Visa Success Rate
# Part Time Job Allowed*
Admission open for Year 2018
* Conditions Applied
iCS Admission Point
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 4926222
107 B 1/1 Galle Road, Colomb 6 011 4343322
Appointment 077 3013060

மணமகள் தேவை
யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த 1981.09.04 இல் பிறந்த விசாக நட்சத்திரமும், முதலாம் பாதமுடைய பிரான்ஸில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
077 044 6009 (CS/12844) (11.17)

Om Sai Ram

# OBITUARY

## Dr. S Sanmugalingam



Dr.Sanmugalingam Somasekaram formerly residing at Navalar road, Jaffna, Sri Lanka joined the Almighty on Tuesday, January 9, 2018 in Bethesda, MD, USA. He was with us for 91 years.

Dr. Sanmugalingam was born to parents, Rasamma and Somasekaram, attorney-at-law. Dr. Sanmugalingam and his wife Somakalavalli were pillars of the community and made countless contributions to the Jaffna society. They established several local service institutions, providing medical and humanitarian support for those affected by Sri Lanka's civil war, often risking their own safety to help others. They were instrumental in establishing theAssociation for Rehabilitation of the Disabled (AROD), which continues to support individuals with disabilities even today.

After Somakala's passing in 1993, Dr. Sanmugalingam joined his children in the U.S. He is the father ofVignarajSomesh (Rajan), late Nanthini, and Selvaluxmi (Selvi); Father in law of Kalyani, Gunaraj and Gnanapradeepan; grandfather of Madhumitha, Valli, and Keerthana; grandfather in law of Pete, and great-grand father of Sora. Dr. Sanmugalingam's legacy lives on through his organization, AROD, and in the memories of thousands of his former patients, family friends and all who have been touched by his generosity, decency, and altruism. He will be profoundly missed and long remembered by many.

**Funeral Details:**

**Saturday, January 13, 2018**
**9:00-11:00 a.m.**
**Pumphrey Funeral Home**
**7557 Wisconsin Avenue**
**Bethesda, MD 20814,**
**USA**
**http://www.pumphreyfuneralhome.com/**

To reach the family or for other details, please contact Valli at **vsanmugalingam@gmail.com or 301-642-3658.**

Inserted by the members of the committee of AROD, 47/2, Adiyapatham road, Thirunelvely North, Jaffna and its beneficiaries.

(CS/12849)(11,17)

இறுதிச்சந்தர்ப்பம்
CIMA-UK,ENGINEERING-USA
BIT-University of Colombo
புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள்
கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தோர். பல்கலைக்கழக மாணவர்கள். பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது.கற்கை நெறி முடிவில் அரச வேலையிலும். வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படவர். ஆகக்குறைந்தகல்வித்தகைமை. க.பொ.த (சா.த). புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் பெயர், கற்கைநெறி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு sms செய்யவும். மேலதிகவிபரங்கள் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள MCS வளாகத்தில்.
MCS IT CAMPUS

" மீண்டும் தொடங்கும் மிடுக்கு "
யுனிற்
UNIT
தெரியுமா?
இந்திய பொறியியலாளர் யுனிற் உதயகுமாரின் விரிவுரைகள் & நெறியாள்கையுடன்
இப்போது மீண்டும்
AF TECH
உயர்தரக் கணினி கற்கை நெறிகளுடன்
No 124 1/1 Palaly road, Jaffna. 021-2228811 / 0764673221
CISCO CompTIA Java LINUX CCNA Microsoft MCSE ORACLE vmware

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.